# பொருளடக்கம்


| | |
|---|---|
| தூர நோக்கு, பணிக் கூற்று, மற்றும் விழுமியங்கள் | 52 |
| கம்பனி விபரம் | 53 54 |
| மைல் கற்கள் | 55 |
| நிதிச் சிறப்பம்சங்கள் | 56 |
| தொழிற்பாட்டுச் சிறப்பம்சங்கள் | 57 59 |
| தலைவர் மதிப்பாய்வு | 60 |
| பகுதியாக்கல் தகவல் | 61 |
| பணிப்பாளர் சபை | 62 |
| முகாமைத்துவ குழு | 63 |
| கூட்டாண்மை ஆளுநர் சபை | 64-65 |
| பணிப்பாளர் சபை பொறுப்பு அறிக்கை | 66 |
| நிதி அறிக்கை | |
| சுயாதின கணக்களர் அறிக்கை | 67-68 |
| நிதி நிலமை கூற்று | 69 |
| விரிவான வருமான அறிக்கை | 70 |
| உரிமை மாற்றல் கூற்று | 71 |
| காசப்பாய்ச்சல் கூற்று | 72 |
| கணக்கீட்டு கொள்கைகள் | 73 - 90 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 91 - 102 |
| பத்து வருட பொழிப்புக்கள் | 103 - 104 |
| வருடாந்த பொது ஒன்றுகூடல் அறிவித்தல் | |
| பதிலாள் நியமன படிவம் | |
| கூட்டாண்மை தகவல் | |

## தூர நோக்கு

பெருந்தோட்ட தொழிற்துறையில் அனைத்து அக்கறையுடைய தரப்பினரதும் எதிர்பார்ப்புகளை பாதுகாத்து, சாவால் மிகுந்த போட்டியாளராக இருத்தல்.

## பணிக் கூற்று

ஊழியர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதன் மூலம் உன்னதமான மட்டத்திலான வள பயன்பாட்டுடன் உற்பத்தியை மேம்படுத்தி,
தேசத்தின் நலன்களை பாதுகாத்தல்

## விழுமியங்கள்

| | | |
|---|---|---|
| சிறந்த தொழில் வழங்குனர் | :- | உற்பத்தித்திறன், முயற்சியாண்மை, விழுமியங்களை உருவாக்கும், இலாபம் மிக்க, சுற்றாடல் நேயமிக்க, நிறுவன சமூக பொறுப்புடைய, தரத்தில் கவனம் செலுத்தும் நேர்மையான, தகைமையான மற்றும் அர்ப்பணிப்புடைய ஆளணியினரை பலப்படுத்துதல். |
| தரமான வழங்குனர் | :- | எம்மால் மேற்கொள்ளும் அனைத்து செயற்பாடுகளிலும் தொடர்ச்சியான மேம்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளர் உன்னதமான திருப்தியை ஏற்படுத்தல். |
| உற்பத்தித்திறன் | :- | ஒவ்வொரு ஹெக்டேயருரிலும் உச்ச விளைச்சல், பேண்தகு அடிப்படையில் உயர்நதளவு பயனுள்ள காணி பயன்பாடு மற்றும் வீண்விரயத்தை குறைத்து, ஒரு அலகு வள உள்ளீட்டுக்கு உயர்ந்தளவான உற்பத்தித்திறனை பெறுதல். |
| முயற்சியாண்மை | :- | தொழில் சூழலின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப அனைத்து சந்தர்ப்பங்களிலும் கண்டுபிடிப்புக்கள் புதிய அணுகுமுறைகளை பயன்படுத்தி தொடர்ச்சியான அக்கறையை ஏற்படுத்தல். |
| இலாபம் | :- | உயர்ந்தளவு தேறிய விற்பனை சராசரியை (NSA) அடைதல் மற்றும் ஆரம்ப உற்பத்திகள் மற்றும் பெறுமதி சேர் உற்பத்திகளுக்கு இயன்றளவு மிகக்குறைந்த உற்பத்தி செலவை (COP) மேற்கொள்ளுதல். |
| சூழல்-நேயம் | :- | வளங்களை பயன்படுத்தும் போது சூழலுக்கு மிக குறைந்தளவு அல்லது ஊறு விளைவிக்காத வகையில் பயன்படுத்துதல். |
| சமூக பொறுப்பு | :- | நல்லாட்சிக்கு மதிப்பளித்து மக்களையும், சூழலையும் பேணுதல், |

# கம்பனி விபரம்

எல்கடுவ பிளான்டேசன் லிமிற்றட் (EPL) என்பது ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். இது 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் முழுமையான அரச உடமை நிறுனமாக 1993 யூலை 23 இல் கூட்டிணைக்கப்பட்டு 2017 ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

1987 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க அரச தனியார்மயமாக்கல் கொள்கையின் கீழ் கூட்டுத்தாபனம் மற்றும் அரசுடமை வணிகங்கள் பொது கம்பனிகளின் கீழ் கொண்டு வரும் ஏற்பாட்டு விதிமுறைக்கு அமைவாக கம்பனி இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்படும் பாராதீனப்படுத்தபட்ட நிலத்தில் நிறுவப்பட்டது.

இந்த நிறுவனம் இலங்கையின் பொது திறைசேரி செயலாளர் கோல்டன் பங்குதாரராக இருக்கும் ஒரு தனி பங்குதாரர் நிறுவனமாக தொழிற்படுகின்றது.

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 320, ஜயா மாவத்தை கொழும்பு 10. ‘‘ஜனவத்து பியச’’ வில் அமைந்துள்ளது.

1993 யூலை மாத 776/13 இலக்க அதி விசேட வர்த்தமானியின் படி எஸ்.எல்.எஸ்.பி.சி. நிர்வகிக்கும் கெலெபோக்க அரச பெருந்தோட்டத்திலுள்ள பின்வரும் 10 தோட்டங்கள் மற்றும் 02 பிரிவுகளை கையகப்படுத்தி ஈ.பி.எல் உருவாக்கம் தொடர்புடைய அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஈ.பி.எல் கம்பனியின் உண்மையான நில ஒதுகீடு (776/13 இலக்க 23 யூலை 1993 திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு) பின்வருமாறு

| தோட்டம் /அமைவிடம் | மாவட்டம் | பயிர்கள் | மொத்த பரப்பு (கெக்டேயர்) குறிப்பு 01 பார்க்க |
|---|---|---|---|
| 1. .பண்டாரபொல, அல்வத்தை | மாத்தளை | தேயிலை | 283.00 |
| 2. எல்கடுவ, எல்கடுவ, | மாத்தளை | தேயிலை மற்றும் கிராம்பு | 447.78 |
| 3. குனுகல, எல்கடுவ, | மாத்தளை | தேயிலை மற்றும் கிராம்பு | 264.73 |
| 4. பிட்டகந்த, மாத்தளை | மாத்தளை | தேயிலை | 520.60 |
| 5. ரட்வத்தை, உகுவெல | மாத்தளை | தேயிலை மற்றும் கிராம்பு | 570.58 |
| 6. செலாகம, ஜடவத்தை | மாத்தளை | தேயிலை | 255.00 |
| 7. ஹபுகஸ்பிடிய, மெடிகக்கெ | மாத்தளை | இறப்பர்,கொக்கோ மற்றும் மிளகு | 269.33 |
| 8. மல்வான, மெல்ஸ்ரீபுர | மாத்தளை | தெங்கு, கொக்கோ, இறப்பர் மற்றும் மிளகு | 603.60 |
| 9. நலந்தன, மடவல உல்போத்த | மாத்தளை | இறப்பர் , தெங்கு மற்றும் மிளகு | 496.27 |
| 10. நெலா ஒலா, பிகிம்புவ | குருணாகல் உப மாவட்டம் | இறப்பர், மர முந்திரிகை, மா | 358.00 குறிப்பு 02 பார்க்க |
| 11. கபறகல, போவாங்கல பிரிவு (கெலெபோக்கெ அரச பெருந்தோட்டம்) | மாத்தளை | மரம் (யூகலிப்டஸ்) | 217.00 குறிப்பு 03 பார்க்க |
| **மொத்தம்** | | | **4,285.89** |

## குறிப்பு 01

776/13 இலக்க அதி விசேட வர்த்தமானியில் (EPL) கம்பனிக்கு வெளியில் குத்தகைக்கு விடப்பட்ட நில அளவு காட்டப்படவில்லை, எனவே மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் நிறுவன கணக்குகளின் நோக்கத்திற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற ''பெருந்தோட்ட சீர்திருத்த பிரிவில்'' உள்ள தகவல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

## குறிப்பு 02

கெலபோக்கே தோட்டத்தின் பிரிவுகளான 217 ஹெக்டேயர் கபரகல மற்றும் பொங்கலா பிரிக்கப்பட்டு 1995 ஆம் ஆண்டில் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

மெற்ரோபொலிட்டன் ஏஜென்சி (பிறைவேற்) லிமிற்றட்க்கு 100 % சொந்தமான மெற்ரோபொலிட்டன் பிளான்டேசன் லிமிற்றட் நிறுவனத்தால் 1993 யூலையில் முதல் 05 ஆண்டுகள் முகாமைத்துவ ஒப்பந்தம் மூலம் எல்கடுவ பிளான்டேசன் முகாமை செய்யப்பட்டது. மேலும் இவ் ஒப்பந்தம் காலவதியானதுடன் கம்பனியின் நிர்வாகத்தை SLSPC 1999 ஜனவரி 19 அன்று கையகப்படுத்தியது.

அரசாங்கம் 1994 முதல் கட்டுப்படுத்தும் பங்குகளில் 51% விற்பனை செய்வதன் மூலம் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் (RPC) உரிமையை தனியார்மயமாக்க தொடங்கியது. 1994 - 2004 காலப்பகுதியில் பொது நிறுவன சீர்திருத்த ஆணைக்குழு (PERC) ஊடாக ஆறு சந்தர்ப்பங்களில் EPL விற்பனைக்கு வழங்கப்பட்டது. மெற்ரோபொலிட்டன் ஏஜென்சி (பிறைவேற்) லிமிற்றட் அல்லது வேறு எந்தவொரு முதலீட்டாளரும் PERC ஏற்றுக்கொள்ள கூடிய முதலீட்டு திட்டத்துடன் முன்வரவில்லை, இதன் விளைவாக EPL திறைசேரிக்கு சொந்தமான PRC ஆக இருக்கிறது.

கூட்டிணைப்பு – (23 ஜூலை 1993) முகாமைத்துவ முகவர் - மெற்ரோபொலிற்றன் ஏஜன்சீஸ் (பிறை) லிமிற்றட் 1993 ஆகஸ்ட் மாதம் செயற்பாட்டு அலுவலகம் கொழும்புக்கு மாற்றப்பட்டது. மொத்தமாக 8 நிறைவேற்று அலுவலர்களும், 30 ஆளணி உறுப்பினர்களும் கொழும்பிலுள்ள முகாமைத்துவ முகவர் அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். ஏனையோர் மேற்கொள்வதற்கு கடமைகள் எதுவுமின்றி மாத்தளை அலுவலகத்தில் தொடர்ந்தும் இருந்தனர்.

**தேயிலை தோட்டங்களுக்காக குழும முறைமை அறிமுகப்படுத்தப்படுதல் - 1994**

பண்டாரபொல, எல்கடுவ, ஹூணுகல, பிற்றகந்த ஆகிய நான்கு தோட்டங்கள் பிற்றகந்த குழுமம் எனவும், ரத்வத்த, செலகம ஆகிய தோட்டங்கள் ரத்வத்த குழுமம் எனவும் கூட்டிணைக்கப்பட்டன.

SLSPC முகாமைத்துவ முகவராக 1999 ஜனவரி 19 திகதி பொறுப்பேற்றது. மின் கட்டணம் செலுத்தப்படாமை காரணமாக இலங்கை மின்சார சபை (CEB) மின் வழங்கலை துண்டித்தமை காரணமாக 2002 ஆகஸ்ட் மாதம் 3 தொழிற்சாலைகளும் மூடப்பட்டன. தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டமையே தற்போதைய நெருக்கடிக்கான பிரதான காரணியாக கருதப்படுகிறது.

EPL தனது தேயிலை கொழுந்துகளை வெளியே தேயிலை தொழிற்சாலைகளுக்கு விற்க நிர்ப்பந்திக்கப்பட்டது.

பிரதம நிறைவேற்று அலுவலர் நியமனத்துடன் 2004 ஆண்டில் EPL முகாமைத்துவம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவினால் (PMMD) பொறுப்பேற்கப்பட்டது.

2006 ஆண்டில் பொது திறைசேரியால் முழு நேர தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டு, 2006 ஜனவரியிலிருந்து முகாமைத்துவம் செய்யப்படுகிறது. பண்டாரப்பொல தேயிலை தொழிற்சாலையை தனியார் முதலீட்டாளரான பிறைய்ட் ரி கம்பனி (பிறை) லிமிற்றட்டிற்க்கு 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் EPL வழங்கியது. அதற்கமைய EPL தோட்டங்களின் கொழுந்துகளில் பெரும்பகுதி அந்த தேயிலை தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது. 2002 ஆகஸ்ட் வரை இயங்கி வந்த ஏனைய இரண்டு தேயிலை EPL தொழிற்சாலைகள் மின் வழங்கல் துண்டிக்கப்பட்டமை காரணமாக மூடப்பட்டன.

2008 ஆண்டில் ரத்வத்த தேயிலை தொழிற்சாலையை தனியார் முதலீட்டாளரான APN பிளான்ரேசன் லிமிட்டெட்டுக்கு முதற்கட்டமாக 10 ஆண்டு குத்தகை அடிப்படையில் EPL வழங்கியது. மேற்குறித்த முதலீட்டாளர் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தலை மேற்கொண்ட போதிலும், இதுவரை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை.

2013 ஆண்டில் ரத்வத்த தோட்டத்தக்குரிய பன்சல்தென்ன தேயிலை தொழிற்சாலையை தனியார் முதலீட்டாளரான EOAS ஓகானிக் (பிறை) லிமிட்டெட்டுக்கு 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் EPL வழங்கியது. வருடாந்த குத்தகை வாடகை அரசாங்க விலை மதிப்பீட்டு திணைக்கள மதிப்பீட்டின் அடிப்படையிலானதாகும்.

# நிதிச் சிறப்பம்சங்கள்

| | 2014 | 2013 | மாற்றம்% |
|---|---|---|---|
| மொத்த வருமானம் (ரூபா) | 285,583,136 | 246,332,607 | 15.93% |
| மொத்த இலாபம் / (நட்டம்) (ரூபா) | (60,218,239) | (80,964,460) | (25.62%) |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (ரூபா) | 33,706,327 | 39,252,255 | (14.12%) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் (ரூபா) | 37,412,723 | 37,088,172 | 0.88% |
| வரிக்கு முன் இலாபம் (ரூபா) | 30,402,163 | 32,134,528 | (5.39%) |
| ஆண்டுக்கான இலாபம் (ரூபா) | 30,402,163 | 32,134,528 | (5.39%) |
| மொத்த இலாப எல்லை (%) | (21.08) % | (32.87) % | (35.86%) |
| தேறிய இலாப எல்லை(%) | 10.64% | 13.05% | (18.46%) |
| ஒரு பங்குக்கான வருமானம் (EPS) (ரூபா) | 1.69 | 1.79 | (5.59%) |
| மொத்த சொத்துக்கள் (ரூபா) | 941,498,021 | 860,209,539 | 9.45% |
| மொத்த உரிமையாண்மை (ரூபா) | 175,337,128 | 144,934,965 | 20.98% |
| வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | இல்லை | இல்லை | இல்லை |
| ஒரு பங்குக்கான தேறிய சொத்துக்கள் | 9.74 | 8.05 | 20.99% |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1:0.15 | 1.08 | 87.5% |

மேலேயுள்ள புள்ளிவிபரங்கள் 31 டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மற்றும் 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை கூற்றுகளிலிருந்த பெறப்பட்டவையாகும். எனவே இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிலை கூற்று அதனுடன் தொடர்புடைய குறிப்புகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும்

.

# தொற்பாட்டுச் சிறப்பம்சங்கள்


| | 2014 | 2013 | மாற்றம் % |
|---|---|---|---|
| தேயிலை (கொழுந்து) உற்பத்தி (கிலோ) (ரூபா) | 3,254,254 | 3,054,375 | 7% |
| தேறிய விற்பனை சராசரி NSA (ரூபா) | 62,36 | 58.57 | 6% |
| உற்பத்தி செலவு COP (ரூபா) | 89.41 | 85.72 | 4% |
| அறுவடை (ஹெக்ரேயர்) | 727 | 704 | 3% |
| வருமான அளவு - ஹெக்ரேயர் | 915.43 | 903.83 | 1% |
| இறப்பர் (லாடெக்ஸ்) உற்பத்தி (கிலோ) | 93.867 | 116,577 | (-28.05%) |
| தேறிய விற்பனை சராசரி NSA (ரூபா) | 249.68 | 355.17 | (-29.7%) |
| உற்பத்தி செலவு COP (ரூபா) | 414.12 | 373.54 | 11% |
| அறுவடை (ஹெக்ரேயர்) | 311 | 386 | (-19.43%) |
| வருமான அளவு - ஹெக்ரேயர் | 302.29 | 301.97 | 0% |
| தெங்கு உற்பத்தி (தேங்காய்கள்) | 1,368,257 | 519,293 | 163% |
| தேறிய விற்பனை சராசரி NSA (ரூபா) | 29.1 | 18.11 | 61% |
| உற்பத்தி செலவு COP (ரூபா) | 10.3 | 37.10 | 72% |
| அறுவடை (ஹெக்ரேயர்) | 5.141 | 1,962 | 162% |
| வருமான அளவு - ஹெக்ரேயர் | 269.66 | 264.66 | 2% |









# இலாபம் / (நட்டம்) நிலை 1993 – 2013 (ரூபா)

| ஆண்டு | இலாபம் / (நட்டம்) ரூபா | திறைசேரி மானியங்கள் | மொத்த இலாபம் / (நட்டம்) ரூபா |
|---|---|---|---|
| 1993 | (16,158,428) | - | (16,158,428) |
| 1994 | (44,076,870) | - | (44,076,870) |
| 1995 | (32,348,831) | - | (32,348,831) |
| 1996 | (43,109,305) | - | (43,109,305) |
| 1997 | (43,387,199) | - | (43,387,199) |
| 1998 | (41,795,687) | - | (41,795,687) |
| 1999 (*) | (5,305,734) | - | (5,305,734) |
| 2000 | (16,884,862) | - | (16,884,862) |
| 2001 | (32,661,127) | - | (32,661,127) |
| 2002 | (72,197,231) | 168,072,927 | 95,875,696 |
| 2003 | (83,139,468) | 105,859,000 | 22,719,532 |
| 2004 | (78,472,241) | 76,100,000 | (2,372,241) |
| 2005 | (35,075,378) | 70,000,000 | 34,924,622 |
| 2006 | (49,489,141) | 55,000,000 | 5,510,859 |
| 2007 | (39,536,041) | 13,000,000 | (26,536,041) |
| 2008 | 29,490,317 | - | 29,490,317 |
| 2009 | (62,688,625) | - | (62,688,625) |
| 2010 (**) | (4,965,702) | - | (4,965,702) |
| 2011 | (29,733,796) | - | (29,733,796) |
| 2012 | (35,1 68,337) | - | (35,168,337) |
| 2013 | (64,949,088) | - | (64,949,088) |
| 2014 | 30,402,163 | - | 30,402,163 |

கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்ட திறைசேரி மானியங்களின் மொத்த பெறுமதி ரூபா. 488,031,927

- (*) 1999 ஆண்டில் செலான் வங்கி லிமிட்டெட் முன்னாள் வங்கியாளர்களிடமிருந்து திரண்ட வட்டி அறவீடு ரூபா 25.9 மில்லியன் தள்ளுபடி செய்யப்பட்டமையால் நட்டம் குறைக்கப்பட்டது.

- (**) ஊழியர் நம்பிக்கை நிதிய சபையினால் **(ETF)** 35.06 மில்லியன் ரூபா திரண்ட நட்டமான அடடுறு தொகுதிகடன் வட்டி அறவீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டமையால் 2010 ஆண்டின் இறுதியில் நட்டம் குறைக்கப்பட்டது.

- உயிரியல் சொத்துகளின் நியாய பெறுமதியில் மாற்றங்கள் அங்கிகரிக்கப்பட்டது (நியாய பெறுமதியிலிருந்து விற்பனை செலவு கழிக்கப்பட்டது) பின்வரும் ஆண்டு முறையே உண்மையான இலாபம் அல்லது நட்டம்

  2014 - ரூபா 84,6430,003

## எல்கடுவ பிளான்டேசன் லிமிட்டெட்டுக்கு திறைசேரியால் விடுவிக்கப்பட்ட நிதிகள் 1999 - 2014

| ஆண்டு | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| 1993 - 2002 | திரண்டமீதி | 168,072,927 |
| 2003 | கிடைத்த நிதிகள் - மீண்டெழும் | 105,859,000 |
| 2004 | கிடைத்த நிதிகள் - மீண்டெழும் | 76,100,000 |
| 2005 | கிடைத்த நிதிகள் - மீண்டெழும் | 70,000,000 |
| 2006 | கிடைத்த நிதிகள் - மீண்டெழும் | 55,000,000 |
| 2007 | கிடைத்த நிதிகள் - மீண்டெழும் | 13,000,000 |
| 2008 | - | - |
| 2009 | - | - |
| 2010 | - | |
| 2011 | - | - |
| 2012 | - | - |
| 2013 | - | - |
| **மொத்தம்** | | **488,031,927** |

# தவிசாளரின் மதிப்பாய்வு



2018 ஆகஸ்ட் மாதம் கடமைகளை ஏற்றுக்கொண்டு நிறுவனத்தின் தவிசாளர் என்ற வகையில் 31 டிசம்பர் 2014 முடிவடைந்த ஆண்டுக்கான எல்கடுவ பிளான்டேசன் லிமிட்டெடுக்கு (EPL) உரிய வருடாந்த அறிக்கையை அக்கறையுடைய தரப்பினர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

எல்கடுவ பிளான்டேசன் லிமிட்டெடின் (EPL) முன்னைய முகாமைத்துவங்களின் கீழ் வருடாந்த பொது கூட்டம் (AGMs) நடத்துதல் மற்றும் வருடாந்த அறிக்கையை இலங்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதில் தேவையற்ற தாமதங்கள் ஏற்பட்டன.


எனினும், இந்த கம்பனியின் தவிசாளராக நான் பொறுப்பேற்றதன் அடிப்படையில் 2007 ஆண்டின் 7 இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் எல்கடுவ பிளான்டேசன் லிமிற்றட்டின் (PB5) கூட்டிணைப்பு விதி ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக வருடாந்த அறிக்கையை நிறைவு செய்து இலங்கை பாராளுமன்றத்திற்கு உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.


## ஒப்புதல்

மீளாய்வு செய்யப்பட்ட காலத்தில் சிரமங்களை கடந்து தலைமை அலுவலக நிறைவேற்று அலுவலர்கள், பெருந்தோட்ட அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்கள் வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பை கம்பனியின் தவிசாளர் என்ற வகையில் எல்கடுவ பிளான்டேசன் லிமிற்றட்டின் பணிப்பாளர் சபை சார்பில் அங்கீகரிக்கிறேன்.

**நாலக்க தேவிந்த மடவல,**
தவிசாளர்,
எல்கடுவ பிளான்டேசன் லிமிற்றட்

# பகுதியாக்கல் தகவல்




**தேயிலை - கொழுந்து**

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| உற்பத்தி – கிலோ'000 | 3.254 | 3,054 | 2,527 | 3,204 | 3,365 |
| NSA - ரூபா./ கிலோ | 62.37 | 58.58 | 53.27 | 48.36 | 50.32 |
| COP - ரூபா./ கிலோ | 89.42 | (85.7)3 | (80.33) | (73.22) | (59.03) |
| இலாபம் / (நட்டம்) ஒருரூபா./ கிலோ | (27.05) | (27.15) | (27.06) | (24.86) | (8.72) |
| வருமான அளவு – ஹெக் | 915.43 | 903.83 | 91 7.78 | 886.88 | 706.75 |

**இறப்பர் பால்**

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| உற்பத்தி – கிலோ'000 | 94 | 117 | 116 | 128 | 123 |
| NSA - ரூபா./ கிலோ | 249.34 | 355.17 | 404.01 | 497.67 | 383.15 |
| COP - ரூபா./ கிலோ | 413.54 | 373.54 | 335.79 | 293.77 | 240.45 |
| இலாபம் / (நட்டம்) ஒருரூபா./ கிலோ | (162.20) | (18.37) | (68.22) | (203.90) | (142.70) |
| வருமான அளவு – ஹெக் | 302.29 | 301.97 | 287.47 | 308.05 | 247.24 |

**தேங்காய்**

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| உற்பத்தி – கிலோ'000 | 1,386 | 519 | 1,220 | 1,406 | 1,039 |
| NSA - ரூபா./ கிலோ | 28,72 | 18.12 | 21.50 | 25.12 | 18.76 |
| COP - ரூபா./ கிலோ | (10,17) | (37.12) | (16.68) | (15.97) | (17.16) |
| இலாபம் / (நட்டம்) ஒருரூபா./ கிலோ | (18.55) | (19.00) | 4.82 | 9.15 | 1.60 |
| வருமான அளவு – ஹெக் | 269.66 | 264.66 | 264.66 | 263.21 | 263.21 |

# பணிப்பாளர் சபை

2014 ஆம் ஆண்டுக்கன கம்பனியின் பணிப்பாளர் சபை

| | | |
|---|---|---|
| 01. திரு. நீல் டெரன்ஸ் போஹகலந்த | – | தலைவர் / பணிப்பாளர் |
| 02. திருமதி. தெலம்புறே விதானகே வீரசேன | – | பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி |
| 03. திரு. தொட்டஹேவரலாகே பீலிக்ஸ் சுனில் பெர்ணான்டோ | – | பணிப்பாளர் |
| 04. திரு. சந்திரதாஸ சமரசிங்க திசாநாயக்க | – | பணிப்பாளர் |
| 05. கலாநிதி. ஸ்ரீ ஹர்ஷ குமுதுசிறி சமரவீர | – | பணிப்பாளர் |
| | – | |

2018 ஜூலை 24 திகதி நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,

| | | |
|---|---|---|
| 01. திரு. நாலக்க தேவிந்த மடவல | – | தலைவர் / பணிப்பாளர் |
| 02. திருமதி. ராமநாயக்ககே மல்லிகா ஜெயந்தி | – | பணிப்பாளர் / திறைசேரி |
| 03. திருமதி. விக்கிரமசிங்க முதியான்சலாகே தம்மிக்கா தரங்கனி விக்கிரமசிங்க | – | பணிப்பாளர் / அமைச்சு பிரதிநிதி |
| 04. திரு. வண்ணக்குவட்ட வடுகே ருச்சிர நிசாந்த பெர்ணான்டோ | – | பணிப்பாளர் |
| 05. திரு. சேன கங்கொடதென்ன | – | பணிப்பாளர் |
| 06. திருமதி. நிலுசா மனோரி தந்திரிகே | – | பணிப்பாளர் |
| 07. திரு. ரஞ்சித் அசோக்க ஹேரத | – | பணிப்பாளர் |

கம்பனி கூட்டிணைப்பு ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டுக்கு குறையாமலும், ஏழுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும். அனைத்து பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் இலங்கை பொது திறைசேரியின் செயலாளரால் நியமிக்கப்பட்டார்கள்.

### பணிப்பாளர்களை நியமித்தல்.

அனைத்து பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் "நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்" என்பதனால், அவர்கள் கம்பனியின் வருடாந்த பொது கூட்டத்தில் ஓய்வு பெற வேண்டிய தேவையில்லை.

### பணிப்பாளர்கள் பங்கு வைத்திருத்தல்

எந்தவொரு பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் அல்லது அவர்களது வாழ்க்கை துணையும் கம்பனியின் பங்குகளை கொண்டிருக்கவில்லை.

### பணிப்பாளர்கள் ஒப்பந்தங்கள் மீதான ஆர்வம்

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக கம்பனியின் எந்தவொரு ஒப்பந்தங்களில் அல்லது முன்வைக்கப்பட்ட ஒப்பந்தங்களில் சம்பந்தபடவில்லை.

# முகாமைத்துவ குழு

## சிரேஸ்ட முகாமைத்துவம்

திரு நீல் டெரன்ஸ போஹகலந்த — தவிசாளர் / பணிப்பாளர்
திரு.எஸ்.எம்.டி சில்வா — பொது முகாமையாளர்
திரு. கே.எச். விக்ரமசிங்க — பிரதி பொது முகாமையாளர்

## இடமட்ட முகாமைத்துவம்

திரு.ஆர்.எம்.சி விஜேரட்ண — கணக்காளர்
திரு.டி.எ.டனியல் — முகாமையாளர் - MIS விசேட திட்டம்
திரு. எச்.ஏ.பி.எஸ். உடுகம — முகாமையாளர்- சந்தைப்படுத்தல்.

## தோட்டங்களின் முகாமையாளர் மற்றும் ஏனையவை

### பண்டாரபொல தோட்டம்
திரு. சி.பி. நுகவெல
தோட்ட அத்தியட்சகர்

### எல்கடுவ தோட்டம்
திரு. ஈ.எம்.டி. ராஜசேகர
தோட்ட அத்தியட்சகர்

### ஹுணுகல்ல தோட்டம்
திரு.கே.எச். விக்கிரமசிங்க
தோட்ட அத்தியட்சகர்

### ஹுன்னஸ்பிற்றிய தோட்டம்
திரு.பி.ஆர். பெரேரா
தோட்ட அத்தியட்சகர

திரு.கே.ஆர்.எஸ்.பி. தர்மசேன
உதவி அத்தியட்சகர்

### மில்லவான தோட்டம்
திரு.ஆர்.ஏ.சி.பி. குமார
தோட்ட அத்தியட்சகர்

திரு.எஸ்.ஆர். திசாநாயக்க
உதவி அத்தியட்சகர்

### நாலந்த தோட்டம்
திரு.டி.எஸ்.என். பெரேரா
தோட்ட அத்தியட்சகர்

திரு.எஸ்.எம். அமரசிங்க
உதவி அத்தியட்சகர

### பிற்றகந்த தோட்டம்
திரு.ஆர். டிசகே
தோட்ட அத்தியட்சகர்

திரு.கே.பி.என்.பி. கருணாரத்ன
உதவி அத்தியட்சகர்

திரு.யு. செனவிரத்ன
உதவி அத்தியட்சகர்

### ரத்வத்த தோட்டம்
திரு.எம்.எல்.கே.ஆர். சேனாரத்ன - தோட்டஅத்தியட்சகர்

திரு.என்.எச்.ஏ.பி. யாப்பா
உதவி அத்தியட்சகர்

### செலகம தோட்டம்
திரு.ஈ.எம்.டி. ராஜசேகர
தோட்ட அத்தியட்சகர்

# நிறுவன ஆளுனர் சபை அறிக்கை

சட்ட விதி முறைமை, மற்றும் செயற்பாட்டு முறைமைக்கமைய கம்பனியை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி நிர்வகித்தல் நிறுவன ஆளுகை எனப்படுகிறது. நேர்மை, கூட்டாண்மை நேர்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகிய ஆளுகை கோட்பாடுகளை அடித்தளமாக கொண்டு அனைத்து பங்குதார்களுடனும் உறுதியான உறவை கட்டியெழுப்ப முயற்சியெடுத்தும், இயல்பான சூழலுக்கு ஏற்பவும் எல்கடுவ பிளான்டேசன் பணிப்பாளர் சபையின் முதன்மையான மரபுகளுக்கமைய கம்பனி இயக்கப்படுகிறது. நெறிமுறை தராதரங்கள் மற்றும் பங்குதாரர்களின் சிறந்த நலனுக்காக கம்பனியின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அர்ப்பணிப்பானது சரியான வகிபாகங்களுக்கு உதவுதல், கட்டமைப்புகள் மற்றும் தகவல்கள் பொதிந்துள்ள கொள்ளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் செயற்பாடுகளுடன் வணிகத்தின் ஒழுங்குபடுத்தலுக்கு இணங்கவும், பேண்தகு தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் மட்டுமன்றி வணிக பெறுமானத்தை அதிகரிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபை**

பணிப்பாளர் சபையானது இறுதியில் கம்பனியின் செயலாற்றுகைக்காக வகைகூறல் மற்றும் பொறுப்புகூறல் கடப்பாடுடைய கம்பனி ஆளுகை செயற்பாட்டின் மையப்புள்ளியாக இருக்கும். கூட்டாண்மை ஆளுகைக்கான மிகச்சிறந்த நடைமுறைகள் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

**கட்டமைப்பு**

பணிப்பாளர் சபையில் தலைவர் உட்பட ஆறு நிறைவேற்று தரமற்ற உறுப்பினர்கள் உள்டங்குகின்றனர்.

**பொறுப்பு கூறல்**

பிரதான கொள்கைகள் மற்றும் தந்திரோபாய நோக்கங்களை உறுதிப்படுத்தி அமுல்படுத்துதல். நிதி தகவல்களின் நேர்மை மற்றும் கம்பனி கட்டமைப்பின் வினைத்திறனுக்கான உள்ளக கட்டுப்பாட்டு இறுதிப் பொறுப்பையும் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

**பணிப்பாளர் சபை கூட்டம்**

மாதாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்த திட்டமிடப்படுகிறது. இந்த பணிப்பாளர் சபை கூட்டங்களில் கம்பனியின் மூலோபாய வழிகாட்டல், வருடாந்த வரவுசெலவு திட்ட மீளாய்வு மற்றும் அனைத்து செயற்பாடுகள், சமகால மற்றும் மூலதன செலவு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான மீளாய்வு செய்யப்படுகின்றன. உரிய ஆவணங்கள் ஒவ்வொரு கூட்டத்துக்கும் முன்னர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2014 ஆண்டில் 06 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

கூட்டாண்மை ஆளுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக, பணிப்பாளர் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமிக்கப்படுகிறது. நிதி அறிக்கையிடல், சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதான தன்மை, உள்ளக கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் மதிப்பீடுகளை மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் பணிப்பாளர் சபையால் கணக்காய்வு குழுவுக்கு வழங்கப்படுகிறது. நிறைவேற்று தரமற்ற மூன்று பணிப்பாளர்கள் கணக்காய்வு குழுவில் அங்கம் வகிப்பார்கள். பொது திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபை உறுப்பினர் கணக்காய்வு குழவின் தலைவராக இருப்பார். கணக்காய்வு குழு கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடத்த திட்டமிடப்படுகின்றன. பொது திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபை உறுப்பினரின் தலைமையில் கணக்காய்வு குழு கூட்டங்கள் ஒழுங்காக நடத்தப்படுகின்றன.

பொது முகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் ஏனைய முகாமையாளர்கள் அழைப்புக்கு அமைய இந்த கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர். பிரதம உள்ளக கணக்காய்வாளர் கூட்டம் மற்றும் அழைப்பு விடுவதற்கான ஒருங்கிணைப்பை மேற்கொள்வார். 2014 ஆண்டில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**சட்டபூர்வ தேவைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல்.**

கம்பனியின் குறிப்புகள், கம்பனியின் கட்டுரைகள் மற்றும் நாட்டின் அரசுக்கு சொந்தமான வணிக முயற்சியாண்மைகளுக்கு ஏற்புடைய ஏனைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதாக கம்பனி இயங்குகிறது என்பதனை உறுதிப்படுத்த பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் முயற்சியெடுத்துள்ளனர். கம்பனியின் நிதிநிலை கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் 2007 ஆண்டின் 07 இலக்க கம்பனிகள் சட்டத்துக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர் சபை சான்றுபடுத்துகிறது.

## பணிப்பாளர்களின் பொறுப்புக்கூறல் அறிக்கை

2007 ஆண்டின் 7 இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளை வைத்திருத்தல். எல்கடுவ பிளான்டேசன் லிமிட்டெட் பணிப்பாளர் சபை அவர்களின் பெறுப்புகள் கம்பனி நிதி அறிக்கையிடலுடன் தொடர்புபட்டுள்ளது என்பதற்கு ஒப்புதல் வழங்குதல். ஆகிய பொறுப்புகள் அதன் கணக்காய்வளர்களில் இருந்து வேறுபடுகின்றது. P.E மெத்தியூ அன்ட் கம்பனி, பட்டய கணக்காளர்கள் தமது அறிக்கைகளில் காட்டியுள்ளனர் என்பதுடன், அந்த விபரங்கள் அறிக்கையின் 15 ஆவது பக்கத்தில் காடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 31 டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் நிதி கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளன. அவை 2007 ஆண்டின் 7 இலக்க கம்பனிகள் சட்டம், இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் கொழும்பு பங்கு சந்தையில் பட்டியல் படுத்துவதற்கு உரிய நியமங்களுக்கும் விதிகளுக்கும் அமைவாக தேவையான தகவல்களை வழங்குகின்றன. பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் பாவிக்கப்பட்டுள்ளன எனவும், தொடர்புடைய அனைத்து கணக்கீட்டு நியமங்களும் 15 தொடக்கம் 45 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள. அவை நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டுள்ளன எனவும் பணிப்பாளர் சபை சான்றுபடுத்துகிறது. அந்த நியமங்களிலிருந்து ஏதாவது விபர இடைவிலகல்கள் இருப்பின் அவை வெளிப்படுத்தி, விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இந்த நிதி கூற்று தயாரிக்கப்படும் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் நியாயமானதும், விவேகமானதும் ஆகும்.

கம்பனியின் நிதி நிலை நியாயமான துல்லிய தன்மையை வெளிப்படுத்தும் நிதி கூற்றுகளை தயாரிப்பதற்கு போதுமானளவு கணக்கு அறிக்கைகளை பேணி பாதுகாப்பதனை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகிறது. வருடாந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி கூற்றின் மூலம் 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிலை தொடர்பான உண்மையானதும், நியாயமானதுமான பார்வை காட்டப்பட்டுள்ளது எனவும், முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் தொடர்பாகவும் அவர்களது பொறுப்பை உறுதிப்படுத்துகிறது.

கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்கான முழுமையான பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியதாகும். தவறான பொருள்கோடல்கள் மற்றும் மோசடிகளுக்கு எதிராக தனியான சான்றுபடுத்தலை வழங்கக்கூடிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை இல்லை என்பதனை ஏற்றுக்கொள்வதுடன், உள்ளக பரிசீலனைகளை உள்ளடக்கிய உள்ளக நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இருப்பதாக பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துவதுடன், உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் எவ்வளவுதான் திட்டமிடப்பட்டு, அனைத்து சொத்துக்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன எனவும், கொடுக்கல் வாங்கல்கள் உரிய அதிகாரத்துடன், பதிவு வைக்கப்பட்டுள்ளன எனவும் நியாயமான சான்றுகள் உள்ளன. அதன்போது தவறான பொருள்கோடல் மற்றும் முறைகேடுகளை நியாயமான காலப்பகுதிக்குள் தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிக்ககூடியதாக இருக்கிறது.

எதிர்காலத்தில் செயற்பாடுகளை முன் எடுப்பதற்கு போதுமானளவு வளங்கள் கம்பனியிடம் உள்ளதாக பணிப்பாளர் சபை கருதுகிறது. அதற்கமைய இந்த நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதில் பணிப்பாளர் சபை தெடர்ச்சியாக கவனம் செலுத்தும் நிலைப்பாடு பாவிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர்களான P.E மெத்தியூ அன்ட் கோ, பட்டய கணக்காளர்கள் தமது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான மற்றும் தேவையானது என கருதும் மீளாய்வு மற்றும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கான அனைத்து வாய்புகளையும் பணிப்பாளர் சபை வழங்கியுள்ளது. கம்பனியின் கணக்காய்வாளர்களான P.E. மெத்தியூ அன்ட் கோ, பட்டய கணக்காளர்கள் நிதி கூற்றுக்கள் மற்றும் கம்பனியின் அனைத்து நிதி அறிக்கைகளையும், அவற்றுடன் தொடர்புடைய தரவுகளையும் பரீட்சித்துள்ளதுடன் இந்த அறிக்கையின் 15 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள வகையிலான தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களது கருத்துக்கு வருவதற்காக உள்ளக நிர்வாக கட்டமைப்பு தொடர்பான மிளாய்வு மற்றும் எழுமாறான மாதிரி பரிசீலனைகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

பணிப்பாளர் சபையின் சார்பில்,

செயலாளர்கள்,
எல்கடுவ பிளான்டேசன் லிமிற்றட்.

*P.E. மெத்தியூ அண்ட் கம்பனி*
*பட்டய கணக்காளர்கள்*

# சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை
# எல்கடுவ பிளான்டேசன் லிமிற்றட் பங்குதாரர்களுக்கு

## நிதி கூற்றுகள் தொடர்பான அறிக்கை

எல்கடுவ பிளான்டேசன் லிமிட்டெட்டுக்கு உரிய 2014 டிசம்பர் 31 திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிநிலை கூற்று மற்றும் நிறைவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமான கூற்றுகள் மற்றும் பங்கு மாற்றம் தொடர்பான கூற்று, நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கருத்திலெடுக்க வேண்டிய கணக்கீட்டு தராதரங்களின் சாராம்சங்கள் மற்றும் ஏனைய விளக்க குறிப்புகள் எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

## நிதி கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பேற்பு

நிதி கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான சமர்ப்பித்தல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவானது என பணிப்பாளர் சபை (சபை) பொறுப்பேற்கிறது. இந்த பொறுப்பேற்பு மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தவறான பொருள்கோடல்கள் அற்ற நிதி கூற்றுகளை தயாரித்து, நியாயமாக சமர்ப்பத்தலுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் பராமரித்தல், பொருத்தமான கணக்கீட்டு தராதரங்களை தெரிவுசெய்து, பிரயோகித்ததல் நிலைமைக்கேற்ற நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை செய்தல் போன்றவற்றையும் உள்ளடக்கியதாகும்.

## கணக்காய்வாளர்களின் பொறுப்பேற்பு

கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதி கூற்றுகள் தொடர்பான கருத்தை வெளியிடுவதல் எமது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு அமைவாக கணக்காய்வுகளை மேற்கொண்டோம். அந்த தராதரங்களுக்கு ஏற்ப நிதி கூற்றுக்களில் தவறான அர்த்தங்கள் அற்றவை என நியாயமான உறுதிப்படுத்தலை செய்வதற்காக கணக்காய்வு திட்டமிடப்பட்டு, செயற்படுத்தப்பட்டது.

நிதி கூற்றில் உள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு உதவும் சான்றுக்கான ஆவணங்கள் பரீட்சித்தல் அடிப்படையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மோசடி அல்லது தவறு காரணமாக நிதி கூற்றுகளில் தவறுகள் பொருள்கோடல் செய்யப்பட்டும் அச்சுறுத்தலை மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட கணக்காய்வாளர்களின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே செயலொழுங்கு விதிகள் தங்கியுள்ளன. அந்த அச்சுறுத்தல் மதிப்பீட்டின் போது கணக்காய்வு செயல் விதியை திட்டமிடுவதற்காக உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதி கூற்றுகளை தயாரிப்பதற்காக தொடர்புடைய உள்ளக கட்டுப்பாடு கணக்காய்வாளரால் கருத்தில் கொள்ளப்படுகிறது. நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடின் வினைத்திறன் கணக்கீட்டு கொள்கைகளின் தராதரம் மற்றும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல் மற்றும் நிதி கூற்றுகளின் முழுமையான சமர்ப்பித்தலும் கணக்காய்வில் உள்ளடக்கப்படுகிறது.

எமது கணக்காய்வு நோக்கத்துக்கு இன்றியமையாத தேவையான அனைத்து தகவல்களையும், விளக்கங்களையும் எமது மிகச்சிறந்த அறிவுக்கெட்டிய வகையில் பெற்றுக்கொண்டோம். எனவே எமது கணக்காய்வு கருத்துகள் நியாயமான அடிப்படையை கொண்டுள்ளன என கருதுகிறோம்.

## கருத்து

எமது கருத்துக்கமைய நிதி கூற்றுக்கள் மூலம் 2014 டிசம்பர் 31 திகதியில் கம்பனியின் நிதிநிலை தொடர்பான உண்மையான மற்றும் நியாயமான பார்வை வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைவாக நிறைவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் நிதி செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தகைமைகளை பார்க்காமல் எமது கருத்தானது, கடந்த சில ஆண்டுகளில் கம்பனிக்கு மொத்த நட்டம் ஏற்பட்டிருந்ததாகவும், இதுவரையும் கம்பனியின் தற்போதைய பொறுப்புகள் ரூ. 455,472,933 ஆகும். 13, 15, 26 ஆவது குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கம்பனி காலாவதியான பொறுப்புகள் மற்றும் அறிக்கையிடப்படாத பொறுப்புகளில் கருத்திலெடுக்கப்பட வேண்டிய தொகைகளை கொண்டுள்ளதுடன், அதன் மூலம் கம்பனியை தொடர்ந்தும் இயக்குவது தொடர்பான நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது. தொடர்ச்சியாக கம்பனியை இயக்குவதற்கும் ஆற்றல் கம்பனிக்கு கிடைக்கும் நிதியுதவி மற்றும் இலாபம் ஈட்டக்கூடிய செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

**ஏனைய சட்டபூர்வ மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.**

2007/07 இலக்க கம்பனி சட்டத்தின் 163 (2) பிரிவுக்கு அமைய, பின்வரும் விடயங்களை குறிப்பிடுகிறோம்.

(அ) கணக்காய்வு கருத்துகளுக்கான விடயப்பரப்பு மற்றும் வரையறைகள் மேலே காட்டப்பட்டுள்ளன.

(ஆ) எமது கருத்துக்கு அமைய,

- கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நாம் பெற்றுள்ளோம் என்பதுடன், கம்பனியால் உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பது எமது பரிசீலனைகளின் போது தெரிய வருகிறது.
-
- கம்பனியின் நிதி கூற்று கம்பனி சட்டத்தின் 151 ஆவது பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாக உள்ளன.

**பட்டய கணக்காளர்கள்**

கொழும்பு

2015 ஏப்ரல் 29

## ஏல்கடுவ பிளான்டேசன் லிமிற்றட்ட

## 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிகி நிலை

| | குறிப்பு | டிசம்பர 31 . 2014 ரூபா. | 2013 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துகள்** | | | |
| குத்தகை ஆதனம், பொறிகள் மற்றும் | 01 | 166,448,796 | 171,148,187 |
| உரிமம்மற்ற ஆதனம் பொறிகள், உபகரணங்கள் | 02 | 54,328,125 | 53,646,098 |
| இருக்கும் சொத்துகள் உயிரியல் சொத்துகள் | 03 | 322,683,515 | 280,069,964 |
| நுகரத்தக்க உயிரியல் சொத்துகள் | 04 | 277,884,695 | 268,711,504 |
| நிதி முதலீடுகள் | 05 | 44,372,810 | 45,926,340 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துகள்** | | **865,717,941** | **819,502,093** |
| **நடைமுறை சொத்துகள்** | | | |
| இருப்புகள் | 06 | 5,750,096 | 5,635,928 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 07 | 68,490,774 | 34,076,025 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 08 | 1,539,210 | 995,493 |
| **மொத்த நடைமுறைச் சொத்துகள்** | | **75,780,080** | **40,707,446** |
| **மொத்த சொத்துகள்** | | **941,498,021** | **860,209,539** |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்பகள்** | | **நிதி** | |
| **உரிமையாண்மை** | | | |
| கூறப்பட்ட மூலகனம் | 09 | 180.000.010 | 180.000.010 |
| நிறுத்திவைத்த இலாபங்கள் | | (4,662,882) | (35,065,045) |
| மொத்த உரிமையாண்மை | | 175,337,128 | 144,934,965 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| முதிர்ந்த நடைமுறை குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் தீர்கப்பட | 10 | 37,425 | 1,606,726 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 11 | 30,674,847 | 32,227,824 |
| ஓய்வூதிய நன்மை பொறுப்புகள். | 12 | 214,195,608 | 185,617,976 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | 244,907,880 | 219,452,526 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 13 | 349,660,314 | 335,658,976 |
| தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டியவை | 14 | 333,127 | 728,944 |
| மீட்டெடுக்கக்கூடிய தொகுதிக்கடன் பத்திரங்கள் | 15 | 5,000,000 | 5,000,000 |
| குறுங்கால கடன்கள் | 16 | 89,284,756 | 80,049,425 |
| தேறிய முதிர்ந்த நடைமுறை குக்ககை வப்பங்கக்கின் கீம் | 10 | 1,570,658 | 1,763.579 |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை | 12 | 75,404,158 | 72,621,124 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | 521,253,013 | 495,822,048 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்பகள்** | | 941,498,021 | 860,209,539 |

இந்த நிதிநிலை அறிக்கைகள் 2007 ஆண்டின் 7 இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளன.

.....

கணக்காளர்

எல்கடுவ பிளான்டேசன் லிமிற்றறின் நிதி கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர்சபை சார்பில் கையெழுத்திட்டு பொறுப்பேற்கிறது.

..... .....

பணிப்பாளர் பணிப்பாளர்

06 தொடக்கம் 31 வரையான பக்கங்களில் உள்ள விடயங்கள் கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் குறிப்புகளளின் நிதிக்கூற்றின் ஒன்றிணைந்த பகுதியாகும்.

கொழும்பு
2015 ஏப்ரல் 29
Tsp/Sajith/Khw
corpr/Plantation/Elkaduwa/2014

**31 டிசம்பர் 2013 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விரிவான வருமான கூ**ற்று

| | குறிப்பு | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | 17 | 285,583,138 | 246,332,607 |
| விற்பனைக் கிரயம் | | (346,801,376) | (327,297,067) |
| **மொத்த இலாபம்(நட்டம்)** | | (60,218,239) | (80,984,460) |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 18 | 33,700,327 | 39,252,255 |
| நுகரக்கூடிய உயிரியல் சொத்துகளின் விற்பனை செலவை கழிப்பதனால் முகப்பெறுமதி மாற்றத்திலிருந்து எழும் இலாபம் | | 84,630,003 | 97,083,616 |
| நிர்வாக செலவுகள் | 19 | (20,705,368) | (18,283,239) |
| **தொழிற்பாட்டிலிருந்து இலாபம்(நட்டம்)** | | 37,412,723 | 37,088,239 |
| நிதி வருமானம் | 20 | 3,457,669 | 4,613,768 |
| நிதிச் செலவு | 21 | (10,468,229) | (9,567,412) |
| **தேறிய நிதி வருமானம்** | | (7,010,500) | (4,953,644) |
| வரிக்கு முன் இலாபம் (நட்டம்) | | 30,402,183 | 32,134,528 |
| வருமான வரி செலவுகள் | 22 | - | |
| ஆண்டுக்கான இலாபம் (நட்டம்) | | 30,402,183 | 32,134,528 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| நுகரக்கூடிய உயிரியல் சொத்துகளின் முகப்பெறுமதி உழைப்பு | | | |
| ஆண்டுக்கான மொத்த ஏனைய விரிவான வருமானம் | | | |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | 30,402,183 | 32,134,528 |
| ஒரு பங்கிற்கான உழைப்பு (நட்டம்) அடிப்படை மற்றும் நீர்த்த | 23 | (1.69) | (1.79) |

நிதிக் கூற்றின் இடைப்பட்ட பகுதியில் பக்கம் 6 முதல் 31 வரை கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்பு உள்ளன.

## 31 டிசம்பர் 2014 அல் முடிவுற்ற ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று

| | கூறப்பட்ட மூலதனம் | நிறுத்திவைத்த வருவாய்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 ஜனவரி 2013 இல் மீதி | 180,000,010 | (67,199,573) | 112,800,437 |
| ஆண்டுக்கான இலாபம்(நட்டம்) - அறிக்கைக்கு அமைய | | (64,949,088) | (64,949,088) |
| சேர்: கடந்த ஆண்டு சீராக்கம் | | 97,083,616 | 97,083,616 |
| ஆண்டுக்கான சீராக்கப்பட்ட இலாபம் | | 32,134,528 | 32,134,528 |
| **31 டிசம்பர் 2013 இல் மீதி** | 180,000,010 | (35,065,045) | 144,934,965 |
| ஆண்டுக்கான இலாபம்(நட்டம்) | - | 30,402,163 | 30,402,163 |
| **31 டிசம்பர் 2014 இல் மீதி** | 180,000,010 | (4,662,882) | 175,337,128 |

நிதிக் கூற்றின் இடைப்பட்ட பகுதியில் பக்கம் 6 முதல் 31 வரை கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்பு உள்ளது.

| | |
|---|---|
| **தொழிற்ப்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்சல்** | |
| உற்பத்தி விற்பனையிலிருந்து பெற்றுக்கொண்ட காசு | 360,156,084 |
| ஊழியர்கள் மற்றும் வழங்குநர்களுக்கு செலுத்தப்பட்ட காசு | (311,748,088) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (574,525) |
| **தொழிற்ப்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு (குறிப்பு A )** | **47,833,471** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்சல்** | |
| ஆதன விருத்தி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (4,662,166) |
| இமேசர் பிளான்டேசன் விருத்தி | (44,247,850) |
| **முதலீட்டு நடவடிக்கைன்னு பயன்படுத்திய தேறிய காசு** | **(48,910,016)** |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்சல்** | |
| செலுத்தப்பட்ட குத்தகை தவணைக்கட்டணம் | (2,036,558) |
| செலுத்தப்பட்ட கடன் | (3,250,000) |
| தொடர்புள்ள நபர்களுக்கு செலுத்தப்பட்டது | (395,817) |
| செலுத்தப்பட்ட வட்டி | (6,736,224) |
| **நிதியீட்டல் நடவடிக்கைக்கு பயன்படுத்திய தேறிய காசு** | **(12,418,599)** |
| காசும் காசுக்கு சமனானவை தேறிய அதிகரிப்பு /(குறைவு) | (13,495,144) |
| வருட ஆரம்பத்தில் உள்ள காசும் காசுக்கு சமனானவையும் | (3,877,592) |
| வருட இறுதியில் உள்ள காசும் காசுக்கு சமனானவையும் | **(17,372,736)** |

**குறிப்பு A**

| | |
|---|---|
| தொழிற்ப்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்சலுடன் இலாப கணக்கிணக்கம் | |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம்/நட்டம் | |
| **சீராக்கங்கள்** | (30,672,227) |
| பெறுமானத்தேய்வு / காலக்கழிவு | |
| குந்தகை ஒப்பந்தம் மற்றும் கடன் மீதான வட்டி | 9,935,583 |
| பணிக்கொடை ஏற்ப்பாடு | 10,468,229 |
| மானியத்திற்கான காலக்கழிவு | 43,403,006 |
| வட்டி வருமானம் | 917,178 |
| மரம் விற்பனை | (3,457,669) |
| நுகரக்கூடிய உயிரியல் சொத்துகளின் விற்பனை செலவை கழிப்பதனால் | 75,456,812 |
| முகப்பெறுமதி மாற்றத்திலிருந்து எழும் இலாபம் | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (84,630,003) |
| | (574,525) |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்ப்பாட்டு இலாபம்** | (82,190,838) |
| அதிகரிப்பு /(குறைவு) இருப்பு | (114,168) |
| அதிகரிப்பு /(குறைவு) வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | (33,840,224) |
| அதிகரிப்பு /(குறைவு) பிற்போட்ட வருமானம் | (1,552,977) |
| அதிகரிப்பு /(குறைவு) வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 13,192,342 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (12,042,340) |
| | 47,833,471 |

நிதிக் கூற்றின் இடைப்பட்ட பகுதியில் பக்கம் 6 முதல் 31 வரை கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்பு உள்ளது.

**கணக்கீட்க் கொள்கைகள்**

# 1. கூட்டாண்மை தகவல்கள்

## 1.1. அமைவிடம் மற்றும் சட்டபூர்வ தன்மை

எல்கடுவ பிளான்டேசன்ஸ் லிமிட்டெட் (ஈபிஎல்) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு நிறுவப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகும். 1982 / 17 இலக்க கம்பனிகள் சட்டதின் கீழ் கூட்டுத்தாபனங்களை மாற்றுதல் மற்றும் அரசுக்கு சொந்தமான வர்த்தகங்களை பொது கம்பனிகளாக மாற்றுவதற்கான 1987 ஆண்டின் 02 இலக்க சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவப்பட்டதாகும். பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 320, ''ஜனவத்துபியஸ'', டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு – 10 எனும் முகவரியில் அமைந்துள்ளது. பெருந்தோட்டங்கள் மாத்தளை மற்றும் குருநாகல் பிரதேசங்களில் உள்ளன.

## 1.2 கொள்கைகள் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

தேயிலை பயிர்ச்செய்கை, உற்பத்தி மற்றும் விற்பனை. இறப்பர், தென்னை, கொக்கோ மற்றும் ஏனைய விவசாய உற்பத்தி செயற்பாடுகளிலும் கம்பனி ஈடுபட்டுள்ளது.

## 1.3 தாய் நிறுவனங்கள்

கம்பனியின் தாய் நிறுவனவாகமும், கட்டுப்படுத்தும் தரப்பாகவும் இலங்கை அரசு பொறுப்பாக செயற்படுகிறது.

# 2. தயாரிப்பின் அடிப்படை

## 2.1 இணக்க கூற்றுக்கள்

எல்கடுவ பிளான்டேசன்ஸ் லிமிடெட் கம்பனியின் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவனத்தின (ICASL) மற்றும் 2007 ஆண்டின் 07 இலக்க இணக்க கூற்றுக்களுக்கான தேவைப்பாடுகளுக்கு அமைய நிதி அறிக்கையிடல் (SLFRS, LKAS) இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் 1995 ஆண்டின் 15 இலக்க கணக்காய்வு நியம சட்டத்திற்கு அமைய இலங்கை கணக்கியல் நியம தேவைப்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2.2 அளவீட்டுக்கான அடிப்படை

இந்த நிதி கூற்றுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கோட்பாடுகளை தவிர வரலாற்று செலவு கொள்கை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2.3 செயற்பாட்டு மற்றும் முன்வைக்கப்படும் நாணயம்

இந்த நிதி கூற்றுக்கள் வேறு விதமாக கூறப்படாவிட்டால் இலங்கை ரூபா (Rs) மற்றும் ரூபாவுக்கு அண்மித்ததாக வழங்கப்பட்டுள்ளன.

# 3. தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடு

SLFRS / LKAS தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக நிதி நிலை கூற்றுக்களை தயாரிப்பதற்கு கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்களின் தொகைகள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றில் தாக்கம் செலுத்தும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை செய்ய முகாமைத்துவத்துக்கு உட்படுத்த வேண்டிய தேவையேற்படுகிறது. தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் வரலாற்று அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாக கொண்டவையாகும். எனவே, சூழ்நிலைகளுக்கு அமைவாக நியாயமானவை என நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உள்ளிட்ட உண்மையான அனுபவங்கள், தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை எடுகோள்கள் சமகாலத்துக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. திருத்தங்கள் அந்த காலத்துக்கும், ஏதாவது எதிர்காலத்திலும் தாக்கம் செலுத்தினால் மட்டுமே கணக்கியல் மதிப்பீடுகளிலான திருத்தங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை மற்றும் நிதி நிலை கூற்றுக்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் காத்திரமான விளைவுடைய கணக்கியல் கோட்பாடுகளை பயன்படுத்துதலில் முக்கியமான தீர்மானங்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன

### 3.1 வருமான வரிகள்

நிறுவனம் வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் மதிப்பீட்டு அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் வரிப் பொறுப்புகள் அங்கிகரிக்கிறது. இவ் விடயத்தில் இறுதி வருமான வரியானது ஆரம்பத்தல் பதிவு செய்யப்பட்ட தொகையிலிருந்து வேறுபடுகின்றது. இது போன்ற தீர்மானம் மெற்கோள்ளப்படும் காலப்பகுதியின் நடைமுறை மற்றும் பிற்போட்ட வருமான வரி சொத்து மற்றும் பொறுப்புகளில் தாக்கத்தினை செலுத்தும்

### 3.2 ஓய்வு நன்மை கடப்பாடுகள்

ஓய்வு நன்மை கடப்பாடுகளின் நிகழ்கால பெறுமதி எவ்வித எடுகோள்களும் இல்லாமல் இயல்பான அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்ற காரணிகளில் எண்ணிக்கையில் தங்கியிருக்கின்றது. ஓய்வு நன்மை கடப்பாடுகளை தீர்மானிக்க பயன்படுத்தும் பிரதான எடுகோள்கள் குறிப்பு .12 இல் தரப்பட்டுள்ளது. இந்த எடுகோள்களில் ஏற்படும் மாற்றம் ஓய்வு நன்மைகடப்பாடுகள் கொண்டிருக்கும் தொகையில் தாக்கத்தை ஏற்படுத்தும்

### 3.3 உயிரியல் சொத்துக்கள்

நிர்வகிக்கப்பட்ட மரங்களின் முகப்பெறுமதி பல்வேறுபட்ட நிதி மற்றும் நிதி சாரா எடுகோள்களை பயன்னடுத்தி கழிவுமுறையில் தீர்மானிக்கப்படுகின்ற பல காரணிகளால் தங்கியிருக்கின்றது மரங்களின் வளர்ச்சியானது மிகவும் கணிக்க முடியாத பல்வேறு உயிரியல் காரணிகளால் திர்மானிக்கப்படுகின்றது. எடுகோள்களில் ஏற்படும் ஏதாவது மற்றம் உயிரியல் சொத்துகளின் முகப்பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தும

### 3.4 நன்மதிப்பு குன்றுதல்

குறைந்தபட்ச ஒரு வருட அடிப்படையில் நன்மதிப்பு குன்றுகிறதா இல்லையா என்பதனை குழுமம் தீர்மானிக்கின்றது. நன்மதிப்பு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற பணம் உருவாக்கின்ற அலகுக்கு ‘‘பயன்பாட்டு பெறுமதி’’ மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அந்த பணம் உருவாகும் அலகு பெறுமதியை மதிப்பீடு செய்ய மற்றும் காசுப்பச்சலின் நிகழ்கால பெறுமதியை கணிப்பதற்கு பொருத்தமான ஒரு கழிவு வீதத்தினை தெரிவு செய்தல். இருப்பினும், தற்போதைய கம்பனியில் நிதி நிலை கூற்று திகதியில் நன்மதிப்பு மீதிக்காக எந்தவொரு பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பிற்போட்ட வரி சொத்துகள்

பயன்படுத்தப்படாத அனைத்து வரி இழப்புக்களுக்கும் அதன் நிச்சயமற்ற வரி வதிக்கக்கூடிய தன்மையை நீடிப்பதற்கு பிற்போட்ட வரி சொத்துக்கள் அங்கிகரிக்கப்பட்டு அவை வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைக்க கூடும் அவற்றுக்கு எதிராக இழப்புகள் பயன்படுத்தலாம். எதிர்கால வரி திட்டமிடல் உத்திகளுடன் எதிர்கால வரிவிதிப்பு இலாபத்தின் சாத்தியமான நேரம் மற்றும் அளவை அடிப்படையாக கொண்டு அங்கீகரிக்கக்கூடிய பிற்போட்ட வரி சொத்துகளின் தொகையை தீர்மானிக்க குறிப்பிடத்தக்க முகாமைத்துவ மதிப்பீடு அவசியம்.

## 4. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்படிருப்பவை தவிர்ந்த ஏனையவை கடந்த வருடத்தில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்திருக்கும். தேவை ஏற்படும் போதெல்லாம் நடப்பாண்டு சமர்பபணத்துடன் உறுதிப்படுத்திகொள்வதற்கு ஒப்பீட்டுத் தகவல்கள் மீள வகைப்படுத்தப்படுகின்றது. எதிர் வரும் காலத்தில் தொடர்வதற்கு கருத்தில் கொண்டு பணிப்பாளர்களால் கம்பனி திறன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் வர்தகத்தினை முன்கூட்டியே கலைக்க அல்லது நிறுத்துவதற்கு எதிர்பார்கவில்லலை

### 4.1 சொத்துக்கள் மற்றும் மீள்மதிப்பீட்டின் அடிப்படைகள்

நிதி நிலை கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களாக காசு மற்றும் வங்கி மீதி வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை கம்பனியின் வனிக அல்லது அறிக்ககையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குட்பட்ட சாதாரண தொழிற்ப்பாட்டு வட்டத்தில் குறுகியது ஏதோ அதில் பணமாக மாற்ற எதிர்பார்க்கப்படுபவை. நடைமுறை சொத்துக்கள் தவிர்ந்த சொத்துக்கள் அவை கம்பனி நிதி நிலை கூற்று திகதியிலிருந்து ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலம் வைத்திருக்கும் நோக்கில் உள்ள சொத்துக்கள்.

### அ) அங்கிகாரம் மற்றும் அளவீடு

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கிடுதல், கிரயத்தை மதிப்பிடு செய்யும் போது (அல்லது காணியாக இருப்பின் முகப்பெறுமதியில்) கிடைக்கும் பெறுமதியில் காலக்கழிவு நட்டத்தை குறைப்பதன் ஊடாக மேற்கொள்ளப்படுவதாக அறிக்கையிடப்பட்டள்ளது.

### ஆ) சொந்தமான சொத்துக்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் என்பது சொத்துக்கள் கையகப்படுத்துவதற்கு நேரடியாக தொடர்புபடும் செலவுகளாகும். அந்த செலவுகளுக்கு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு புதிதாக பகுதிகளை இடுவதற்காக செலவாகும் பணம் மற்றும் அங்கீகரிக்கும் பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் நீண்டகால நிர்மாண திட்டங்களுக்காக கடன் பெறும் கிரயமாகும். சுயமாக உருவாக்கப்பட்ட சொத்துகளின் கிரயத்தில் பொருட்களின் கிரயம் மற்றும் அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்காக தொழிற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு நேரடியாக தொடர்புபடும் செலவீனங்கள் மற்றும் அந்த பொருட்களை அகற்றுவதற்கும் அவை அமைந்துள்ள நிலத்தை மீள தயார்படுத்துவதற்கு செலவாகும் தொகையும் உள்ளடங்கியுள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் பல்வேறு காலப்பகுதிகளில் மீண்டும் பொருத்த வேண்டியுள்ள போது அந்த பகுதிகள் சுயாதீனமான சொத்தாக கருதப்படுவதுடன், அவற்றுக்கு விசேடமாக பாவிக்கக்கூடிய காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு உள்ளதாக கருதப்படுகிறது. அதேபோன்று பிரதான பரிசீலனை செய்யப்படும் போது அங்கிகரிக்கும் முறை திருப்திகரமானதாயின் பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் கிரயத்தில் பதிலீடு செய்யப்பட்டதாக அங்கிகரிக்கப்படுகிறது. ஏனைய அனைத்து பழுதுபார்தல் மற்றும் பரமரித்தல் கிரயம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. ஏற்பாடுகளுக்கான அங்கீகரிக்கும் பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் சொத்துக்கள் பயன்பாட்டின் பின்னர் அதனை அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் கிரயத்தின் நிகழ்கால பெறுமதி குறித்த சொத்துகளின் கிரயத்தில் உள்ளடக்கப்படுகிறது.

நடைபெற்றுவரும் மூலதன நடவடிக்கைகள் முதலாவது பயன்பாட்டின் போது அல்லது சொத்துக்கள் ஆரம்பமாகும் சந்தர்ப்பத்தில் குறித்த சொத்துக்கள் கணக்குக்கு மாற்றப்படுகின்றது.

### இ) குத்தகை சொத்துக்கள்.

நிதி குத்தகை முறையின் கீழ் பெற்றுக்கொன்ட சொத்துக்கள், குத்தகை சொத்துக்களின் உரிமைக்கு இருக்கும் அபாயங்கள் மற்றும் நன்மைகள் அனைத்தும் அவை நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டதாக மற்றும் அவற்றின் பண விலையில் முதலீடு செய்யப்பட்டதாக கருதப்படுகிறது. குத்தகையாக உரித்தாக்கிய சொத்துக்கள் முகப்பெறுமதியின் குறைந்த பெறுமானத்துக்கு சமமாகும் வகையிலும், பரிசோதனையின் ஆகக்குறைந்த குத்தகை செலுத்தப்படுவதனால் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு குறைக்கப்படுவதன் மூலம் அளவிடப்படுகின்றன.

குத்தகை காலம் முடிவடையும் போது அந்த உரிமை மாற்றப்படாவிட்டால், நிதி குத்தகை முறையில் உள்ள சொத்துக்கள் குத்தகை காலப்பகுதி அல்லது சமமான உரிமை சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் முதலீட்டு கழிவு வழங்கப்படுகின்றது. குத்தகைதாரருக்கு செலுத்த வேண்டிய மூலதன கூறுகள் பொறுப்பாக காட்டப்படுகிறது. குத்தகை தவனைக்கட்டணம் மூலதன மற்றும் வட்டி கூறாக கருதப்படும். நிலுவையிலுள்ள கடப்பாடு மற்றும் வட்டிக்கூறை குறைப்பதற்கும் இலாபத்திலிருந்து மூலதன கூறு நிலுவை வீதத்தில் அறவிடப்படுகிறது.

குத்தகை சொத்துக்களின் மீதான மேம்படுத்தல் செலவாக காட்டப்பட்டிருப்பது மூலதனமாக்கப்பட்ட குத்தகை காலத்தில் பெறுமான தேய்வு அல்லது மேம்படுத்தல்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலமாகும்.

### ஈ) தொடரும் கிரயம்

தனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மீள மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் கம்பனிக்கு பொருளாதார நன்மை கிடைக்கும் எனின், அது அந்த பெறுமதி ஊடாக அங்கீகரிக்கப்படுவதுடன், அதன் கிரயத்தை நம்பகமாக அளவிடலாம். மீள பொருத்தப்பட்ட பகுதியின் கொண்டு செல்லும் பெறுமதி கீழே அங்கீகரிக்கப்படாத கொள்கைக்கு அமைய தீர்மானிக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான நாளந்த பராமரிப்பு கிரயம் இலாபம் அல்லது நட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.

### உ) இனங்காணப்படுதல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் சுமந்து செல்லும் பெறுமதி, அதன் மூலம் எதிர்கால பொருளாதார ஏற்பாடுகள் இல்லாத போது அல்லது அகற்றப்படும் போது கருத்தில்கொள்ளப்படாதுள்ளது. பெறுகை அல்லது நட்டம் கூற்றில் காட்டப்பட்டுள்ளதுடன், ஆதாயம் பெறுகையின் கீழ் வகைப்படுத்தப்படவில்லை.

**ஊ) பெறுமான தேய்வு**

சொத்துகள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தை விடவும் எளிமையான நேரடியாக இலாபம் / நட்டமாக அடிப்படையில் வருமான கூற்றில் பெறுமானத்தேய்வு அங்கீகரிக்கப்படுகிறது. குத்தகை காலப்பகுதி முடிவடையும் போது கம்பனிக்கு உரித்தாகவுள்ளதாக நியாயமாக நம்ப முடியாவிட்டால், நிதி குத்தகை முறையின் கீழுள்ள சொத்துக்கள் குத்தகை காலப்பகுதி மற்றும் சமமான உரித்துடைய சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்துக்கு பெறுமானத்தேய்வு செய்யப்படுகிறது. SLSPC / JEDB ஆகியவற்றிலிருந்து கையகப்படுத்திய காணிகளின் குத்தகை காலம் 2036 ஆண்டில் காலாவதியாகிறது.

தற்போதைய மற்றும் திரண்ட காலப்பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறானதாகும்.

| வகை | ஆண்டுகள் | விதம்(%) |
|---|---|---|
| காணி, கட்டிடங்களுக்கான மேம்படுத்தல் | 40 ஆண்டுகள் | 2.5% |
| பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 13 1/3 ஆண்டுகள் | 7.5% |
| நீர், சுகாதாரம் மற்றும் மின்சாரம் | 20 ஆண்டுகள் | 5% |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் | 20% |
| உபகரணங்கள் | 08 ஆண்டுகள் | 12.5% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 10 ஆண்டுகள் | 10% |

**முதிர்ந்த பெருந்தோட்டங்கள் - மீள்நடுகை மற்றும் புதிய நடுகை**

| வகை | ஆண்டுகள் | விதம்(%) |
|---|---|---|
| தேயிலை | 33 1/3 ஆண்டுகள் | 3% |
| இறப்பர் | 20 ஆண்டுகள் | 5% |
| தென்னை | 50 ஆண்டுகள் | 2% |
| கோக்கோ | 50 ஆண்டுகள் | 2% |

சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அதனை பாவிக்கக்கூடியதாக இருக்கும் போது சொத்தின் பெறுமானத்தேய்வு ஆரம்பமாகிறது. சொத்துகளை விற்பனைக்காக வகைப்படுத்தியுள்ள திகதிக்கு முன்னர் அவற்றை பெறுமான தேய்விடல் நிறுத்தப்படும்.

தேவையாயின் பெறுமான தேய்வு முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சேதமடைந்த பொருட்களின் பெறுமதி இருப்பின் அறிக்கையிடும் திகதியில் மீள மதிப்பீடு செய்யப்படுகிறது. முதிர்ந்த தோட்டங்கள் பெறுமான தேய்வடைதல் அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதும் அல்லது காலாவதியாகாத குத்தகை காலப்பகுதி ஆகியவற்றில் எது குறைந்ததோ அதற்கு பெறுமானத்தேய்வு செய்யப்படும்.
முதிராத தோட்டங்களுக்கு பெறுமானத்தேய்வு காட்டப்படவில்லை.

**எ) காலக்கழிவு**

SLSPC/JEDB ஆகியவற்றிலிருந்து கையகப்படுத்திய சொத்துக்களுக்கான குத்தகை உரிமை எஞ்சிய குத்தகை காலம் மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தை விடவும் சமமான அளவில் காலக்கழிவு செய்யப்பட்டுள்ளது.

| வகை | ஆண்டுகள் | விதம்(%) |
|---|---|---|
| குத்தகை சொத்துகள் | 53 ஆண்டுகள் | 1.89% |
| காணி அபிவிருத்தி கிரயம் | 30 ஆண்டுகள் | 3.33% |
| கட்டிடங்கள் | 25 ஆண்டுகள் | 4.% |
| பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 05 ஆண்டுகள் | 20% |
| நீர் திட்டங்கள் மற்றும் சுகாதாரம் | 35 ஆண்டுகள் | 2.85% |
| வீதி அபிவிருத்தி | 30 ஆண்டுகள் | 3.33% |
| முதிர்ந்த தோட்டங்கள் - தேயிலை மற்றும் இறப்பர் | 25 ஆண்டுகள | 3.33% |
| முதிர்ந்த தோட்டங்கள் - ஏனையவை | | 4% |

### 4.1.2 காணி அபிவிருத்தி கிரயம்

நிரந்தர காணி அபிவிருத்தி கிரயங்கள் என்பது உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி மற்றும் குத்தகை காணிகளில் புதிய நுழைவு பாதைகளை அமைப்பதற்கான கிரயமாகும். இந்த கிரயம் எஞ்சிய குத்தகை காலத்தில் மூலதனமாக்கப்பட்டு மற்றும், காலக்கழிவு செய்யப்படுகின்றது..

காணி அபிவிருத்தி கிரயத்தின் நிரந்தர இழப்பு வருமான கூற்றில் முழுமையாக அல்லது இழப்பை உறுதி செய்த பின்னர் நிகழ்ந்த ஆண்டில் அது போன்ற சொத்துகளின் தேறிய கொண்டு செல்லும் தொகை குறைக்கப்பட்டு காட்டப்படும்.

### 4.1.3 உயிரியல் சொத்துக்கள்
### முதிர்ந்த மற்றும் முதிராத பெருந்தோட்டங்கள்

உயிரியல் சொத்துக்கள் முதிர்ந்த உயிரியல் சொத்துகள் மற்றும் முதிராத உயிரியல் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. அறுவடை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையை அடைந்த அல்லது ஒழுங்கான அறுவடையை பெறக்கூடியவை முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் எனப்படுகின்றன. இதுவரை அறுவடை செய்யக்கூடிய நிலையை அடையாதவை முதிர்ச்சியடையாத சொத்துக்கள் எனப்படுகின்றன. தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய தோட்டங்கள் மற்றும் நாற்று மேடைகள் உயிரியல் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உயிரியல் சொத்துக்களாக தொடர்ந்து இருக்கும் உயிரியல் சொத்துகள் மற்றும் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. மிகவும் சிறந்த உயிரியல் சொத்துக்களுக்கு இறப்பர், தேயிலை மற்றும் தேங்காய்கள் அடங்குகின்றன. அவை விற்பனைக்கு அல்லது அறுவடை செய்ய எதிர்பார்க்கப்படவில்லை. இருப்பினும், உயிரியல் சொத்துக்களின் விவசாய உற்பத்திகளை அறுவடை செய்வதற்காக அல்லது உயிரியல் சொத்துக்களாக விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த கால சம்பவங்களின் பெறுபேறாக சொத்துக்களை நிர்வகிக்கும் போதும், பின்னர் சொத்துக்களுடன் தொடர்புபடும் எதிர்கால பொரளாதார நன்மைகள் கிடைக்கக்கூடிய சொத்துக்களின் நம்பகமாக அளவிடக்கூடிய முகப்பெறுமதி அல்லது கிரயத்தில் மேற்கொள்ளும் போது கம்பனி உயிரியல் சொத்துக்களை அங்கீகரிக்கிறது.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய LKAS 16 விதிமுறைகள் பாவிக்கப்பட்டு சொத்துக்கள், தோட்டங்கள் மற்றும் உபகரணங்களின் படி குறைந்த உயிரியல் திரட்டிய பெறுமானத்தேய்வு மற்றும் திரட்டிய காலக்கழிவு நட்டங்கள் அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

முகாமைத்துவம் செய்யப்பட்ட மரங்கள் ஆரம்ப அங்கிகாரத்தின் அடிப்படையில் அளவிடப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் அதன் நியாயமான பெறுமதிக்கு ஏற்ப LKAS 41 விதிமுறைகளின்படி விற்பனைக்காக குறைந்த கிரயத்தை கொண்டுள்ளன. அவ்வாறன உயிரியல் மாற்றங்கள் இடம்பெறும் போது ஏற்படக்கூடிய தாக்கங்களை கருத்திலெடுத்து கிரயம் இளம் மரங்களின் நியாயமான பெறுமதியை அண்மித்த பெறுமானமாக கருதப்படுகிறது. மரங்களின் நியாயமான பெறுமதி முதிர்வு நிலையில் எதிர்பார்க்கப்படும் மர கொள்ளவை அடிப்படையாக

கொண்டு தொழில்வாண்மையான சுயாதீன மதிப்பீட்டாளர்களால் DCF முறையில் மரத்துக்கான சமகால சந்தை விலை அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

### DCF மாதிரி தொடர்பான பிரதாமாக மாறக்கூடியவை

| மாறக்கூடியவை | கருத்து |
|---|---|
| நாணய மதிப்பீடு | ரூபா. |
| மர உள்ளடக்கம | பல்வேறு புவியியல் வலயங்களில், ஒவ்வொரு வகைகளின் வளர்ச்சியை கருத்திலெடுத்து, சுற்றளவு, உயரம் மற்றும் பௌதீக உறுதிப்படுத்தலுக்கு அமைய மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கம்பனியின் வனப்பயிர் திட்டத்துடன் தொடர்புபடுத்தி மரத்தை அறுவடை செய்வதற்கு தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள அனைத்து சட்ட ஒழுங்குவிதிகள் |
| பொருளாதார பயனுள்ள ஆயுட்காலம் | கம்பனியின் வனப்பயிர் திட்டத்துடன் தொடர்புபடுத்தி ஒவ்வொரு வகைகளின் சாதாரண ஆயுட்காலத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டள்ளது |
| விற்பனை விலை | மரங்களை வெட்டுவதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய அனைத்து நிபந்தனைகளுக்கும் அமைவாக, இலங்கை சந்தையில் நடைமுறையிலுள்ள விலைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டள்ளது. |

நாற்றுமேடை கிரயத்தில் நேரடியான பொருட்களின் கிரயம், நேரடி தொழிலாளர் மற்றும் நேரடியாக செய்யப்படும் நிர்வாக செலவுகள், கூடுதலான மரங்களுக்கான குறைவான ஒதுக்கீடு ஆகியவை அடங்குகின்றன.

நியாயமான பெறுமதியில் உயிரியல் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக குறைந்த கிரயத்தில் இலாபம் அல்லது நட்டம் ஏற்படும் காலப்பகுதிக்காக உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 4.1.4 வெற்று உயிரியல் சொத்துக்களுக்காக செய்யப்பட்ட கிரயத்தை நிரப்புதல்.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட காணி நிரப்பும் செயலாற்றுகை மதிப்பீட்டை விடவும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால சாதகமான நிலை கூடிய, முதிர்வடைந்த தோட்டங்களுக்கு காணி நிரப்பலாக நில அபிவிருத்திக்காக செலவு செய்யப்பட்ட தொகை மூலதனமாக்கப்படுகிது. குறித்த முதிர்ந்த தோட்டங்களில் பயனுள்ள பொரளாதாரம் எஞ்சியுள்ள புதிய சொத்துக்கள் அல்லது எதிர்பார்க்கப்படும் குத்தகை காலம் ஆகியவற்றில் எது குறைவானதோ அதற்கு பெறுமானத்தேய்வு செய்யப்படும்.

### 4.1.5 கடன் பெறும் கிரயம்

மூலதனமாக்கல் செய்யப்படாத கடன் பெறுதல் கிரயம் அவை மேற்கொள்ளப்பட்ட கால பகுதியில் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அவை வருமான கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

### 4.1.6 கட்புலனாகா சொத்துக்கள்

பொருட்கள் அல்லது சேவைகளின் உருவாக்கம் அல்லது வழங்கல், வாடகை அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக பாவிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பௌதீக பொருட்கள் இன்றி இனங்காணக்கூடிய நிதிசாரா சொத்துக்கள் கட்புலனாக சொத்துக்கள் எனப்படும்.

சொத்துக்களுக்கு ஏதுவாகக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்துக்கு வரக்கூடிய சொத்துக்களின் கிரயம் நம்பத்தகுந்த முறையில் LKAS 38 விதிமுறைகளுக்கு ஏற்ப கட்புலனாகா சொத்துக்களுக்கு அமைய அளவிடக்கூடியதாக இருந்தால் அவை அரூப சொத்துக்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

தனித்தனியாக கையகப்படுத்தப்பட்ட கட்புலனாகா சொத்துக்கள் ஆரம்ப அங்கீகார கிரயத்துக்கு அமைய அளவிடப்படுகின்றன. வியாபார சேர்க்கையுடன் கையகப்படுத்திய கட்புலனாகா சொத்துகளின் கிரயம் கையகப்படுத்திய திகதியிலிருந்து அவற்றின் முகப்பெறுமதியாகும். கிரயத்தில் தேய்வடைதல் மற்றும் காலக்கழிவு ஏதாவது இருப்பின் அவை குறைக்கப்பட்டு கட்புலனாகா சொத்துக்களில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்தி கிரயம் தவிர உள்ளக ரீதியில்

உருவாக்கப்பட்ட கட்புலனாகா சொத்துக்கள் மூலதனமாக்கப்படவில்லை என்பதுடன், செலவுகள் இடம்பெற்ற ஆண்டுக்கான வருமான கூற்றில் வெளிப்படுத்தப்படுகின்றன.

கட்புலனாகா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வரையறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்படாத என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

அரூப சொத்துக்கள் பெறுமதி இழக்கப்படுவதற்கான அறிகுறி காணப்பட்டால் வரையறுக்கப்பட்ட ஆயுட்காலம் கொண்ட கட்பலனாகா சொத்துக்கள் அவற்றின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம் மற்றும் நட்டத்துக்காக சொத்தில் காலக்கழிவு செய்யப்பட்டுள்ளது. நிச்சயமற்ற பொருளாதார ஆயுட்காலத்தை கொண்ட கட்புலனாகா சொத்துக்களுக்கு முதலீட்டு கழிவு செய்யப்படவில்லை என்பதுடன், இருப்பினும் தனித்தனியாக அல்லது பண உருவாக்கல் அலகு மட்டத்தில் வருடாந்த முதலீட்டு கழிவு பரீட்சிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்ட மற்றும் நிச்சயமற்ற பயனுள்ள ஆயுட்காலத்தை கொண்ட கட்புலனாகா சொத்துக்களின் காலக்கழிவு முறை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகிறது.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிரயம்.**

புதிய குறிப்பிடத்தக்க அல்லது தொழில்நுட்ப அறிவு மற்றும் தெளிவை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான செலவு, இலாபம் அல்லது நட்டம் ஊடாக அங்கீகரிக்கப்படுகிறது.

அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு புதிய அல்லது குறிப்பிடத்தக்க அளவு மேம்பபடுத்தப்பட்ட உற்பத்திகள் மற்றும் செயன்முறைகளுக்கான திட்டம் அல்லது வடிவமைப்பு அடங்குகிறது. அபிவிருத்தி கிரயத்தை நம்பகமாக அளவிட முடியுமாயின், அபிவிருத்தி செலவு மூலதனமாக்கப்படுகிறது. உற்பத்தி மற்றும் செயன்முறை தொழில்நுட்ப மற்றும் வாணிப ரீதியாக மேற்கொள்ளக்கூடியதாக இருந்தால், பொருளாதார நன்மை கிடைக்கும் என்பதுடன், அபிவிருத்தி முழுமையடைவதற்கும், சொத்துக்களை பாவிப்பதற்கும் அல்லது விற்பனைக்கோ போதுமானளவு வளங்கள் கம்பனியிடம் இருப்பதாக கருதினால் மூலதனமாக்கப்பட்ட செலவில் உள்ளடங்குவது பொருட்களின் கிரயம், நேரடி தொழிலாளர் உழைப்பு மற்றும் பொது ஆளணி கிரயம் அடங்குகிறது. ஏனைய அபிவிருத்தி செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இலாபம் அல்லது நட்டமாக காட்டப்பட்டுள்ளது.

கிரயம், குறைந்த திரட்டிய கடன்தொகை மற்றும் திரண்ட காலக்கழிவு இழப்புகள் குறைக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்தி செலவுகள் அளவிடப்படுகின்றன.

## 4.1.7 நிதி கருவிகள்.

### 4.1.7.1 நிதி சொத்துகள்

LKAS 39 விடய பரப்பிலுள்ள ஆரம்ப அங்கீகாரம் மற்றும் நிதி சொத்துக்களை அளவிடுதல் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகை, முதிர்வடையும் மூலதனங்கள், விற்பனைக்கு தயாராகவுள்ள நிதி சொத்துக்கள் அல்லது வினைத்திறனான இழப்புகாப்பு வணிகமாக (hedging) பெயரிடப்பட்டுள்ளவை ஆகியவை நிதி சொத்துக்களாக வகைப்படுத்தப்படவுள்ளன. நிதி சொத்துக்களின் ஆரம்ப அங்கீகாரத்தின் போதுசபையினால் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

அனைத்து நிதி சொத்துக்களும் ஆரம்பத்தில் முகப்பெறுமதியிலும், இலாபம் அல்லது நட்டத்தின் மூலமும், முகப்பெறுமதியில் இல்லாவிட்டால் நேரடி பரிமாற்றம் செய்யக்கூடிய கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கம்பனியின் நிதி சொத்துக்களில் நிதி, குறுங்கால வைப்புகள், குறுங்கால

### 4.1.7.2 இலாபம் அல்லது நட்டத்தினூடாக முகப்பெறுமதியில் நிதி சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக முகப்பெறுமதியுள்ள நிதி சொத்துக்களில் வர்த்தகத்துக்காக வைக்கப்பட்டுள்ள நிதி சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் முகப்பெறுமதியில் ஆரம்ப அங்கீகாரத்தின் அடிப்படையில் பெயரிடப்பட்ட நிதி சொத்துக்கள் உள்ளடங்குகின்றன.

நிதி சொத்துக்கள் அண்மித்த காலத்தில் விற்பனை செய்வதற்கோ, கொள்வனவுக்காக கையகப்படுத்தப்பட்டால் அவை வர்த்தகத்துக்காக வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. முகப்பெறுமதியுடைய நிதி சொத்துக்களின் நிதி நிலையை காட்டும் கூற்றில் இலாபம் அல்லது நட்டமாக காட்டப்பட்டுள்ளதுடன், வருமான கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதி செலவாக முக்பபெறுமதியில் இடம்பெறும் வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக முகப்பெறுமதியில் ஆரம்ப அங்கிகாரத்தின் அடிப்படையில் கம்பனி எந்தவொரு நிதி சொத்துக்களையும் பெயரிடவில்லை.

### 4.1.7.3 கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பது தொழிற்படும் சந்தையில் குறிப்பிடப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் வழித்தோன்றா நிதி சொத்துக்களாகும். ஆரம்ப கணக்கீடுகளின் பின்னர், அவ்வாறான நிதி சொத்துக்கள் குறைந்த பெறுமதியிழப்பு உடைய பயனுள்ள வட்டி வீத முறை (EIR) பாவிக்கப்பட்டு காலக்கழிவு கிரயத்தில் கணிக்கப்படுகிறது. கையகப்படுத்துவதற்கான ஏதாவது கழிவு அல்லது தவணைக்கட்டணம் மற்றும் பயனுள்ள வட்டி வீத (EIR) முறையின் கட்டாய பண்பான கட்டணம் அல்லது கிரயத்தை கணக்கிலெடுத்து முதலீட்டுக் கிரயம் கணக்கிடப்படுகிறது. பயனுள்ள வட்டி வீத முதலீட்டு கழிவு வருமான கூற்றில் நிதி வருமானத்தின் கீழ் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. இழப்பு காரணமாக ஏற்படும் நட்டங்கள் நிதி நிதி கிரயமாக வருமான கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

வியாபார வருமதிகள், தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகைகள், வைப்புகள், முற்பணங்கள் மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் காசுக்கு சமமானவையும் கடன்கள் மற்றும் வருமதிகளில் அடங்கியுள்ளன.

### 4.1.7.4 முதிர்ச்சியடைவதற்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள்

கம்பனிக்கு சாதகமான நோக்கம் மற்றும் முதிர்வடையக்கூடிய ஆற்றல் உள்ள போது நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்வடைந்த வழித்தோன்றா முதிர்வடைவதற்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப அளவீடுகளுக்கு பின்னர், இழப்பை குறைப்பதற்காக பயனுள்ள வட்டி வீத முறையை பயன்படுத்தி முதலீட்டு கழிவு பாதிப்பை குறைத்து முதிர்வடைவதற்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள் அளவிடப்படுகின்றன. வருமான கூற்றின் பயனுள்ள வட்டி வீத முதலீட்டு கழிவு வருமான கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. இழப்பிலிருந்து ஏற்படும் நட்டங்கள் நிதி கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.1.7.5 விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகள் என்பது வழித்தோன்றா நிதி சொத்துக்கள் என்பதுடன், அவை விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ளதாக பெயரிடப்பட்ட அல்லது மேற்குறிப்பிட்ட நிதி சொத்துகளில் எந்தவொரு பிரிவிலும் வகைப்படுத்தப்படவில்லை. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், அவை முகப்பெறுமதி அளவிடப்படுவதுடன், அதில் ஏற்படும் மாற்றங்கள், இழப்பு நட்டங்கள் தவிர்ந்த பரந்த வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு, பகுதிகள் நியாயமாக முன்வைக்கப்பட்டுள்ளன. விற்பனைக்காவுள்ள கடன் பத்திரங்களில் வட்டி வருமானம் பயனுள்ள வட்டி வீத முறை பாவிக்கப்பட்டு கணக்கிடப்படுவதுடன், அது இலாபமாகவோ, நட்டமாகவோ அங்கீகரிக்கப்படுகிறது. முதலீடு அங்கீகரிக்கப்படாத நிலை ஏற்படும் போது, சமபங்குகளின் வருமானம் அல்லது செலவு, இலாபம் அல்லது நட்டமாக மீண்டும் வகைப்படுத்தப்படுகிறது.

மேற்கோள் காட்டப்பட்ட மற்றும் மேற்கோள் காட்டப்படாத பங்குகளின் முதலீடுகளிலிருந்து விற்பனைக்காக உள்ள முதலீடுகளும் அடங்குகின்றன.

### 4.1.7.6 நிதி சொத்துக்களின் மதிப்பிழப்பு

நிதி சொத்து அல்லது ஒரு நிதி சொத்து கூட்டம் பெறுமதி இழந்துள்ளதாக புறநிலை சான்றுகள் இருக்கின்றனவா என கம்பனியினால் மதிப்பீடு செய்யப்படுவதுடன், அவ்வாறு இடம்பெற்றிருந்தால் சொத்துக்கள் கொண்டிருக்கும் தொகை மற்றும் எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமானம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் நட்டத்தின் அளவு அறிக்கை இடப்படும் ஒவ்வொரு திகதியிலும் கணிக்கப்படுகிறது.

### 4.1.7.7 நிதி பொறுப்புகள்

### ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் - 39 ஆவது விடய பரப்பிலுள்ள நிதி பொறுப்புக்கள் பொருத்தமாக இலாபம் அல்லது நட்டமாக முகப்பெறுமதியுடனான நிதி பொறுப்புகள், கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள், வினைத்திறனான இழப்புகாப்பு வணிகமாக (hedging) பெயரிடப்பட்டுள்ள வழித்தோன்றலாக வகைப்படுத்தலாம். ஆரம்ப அங்கீகாரத்தின் போது கம்பனியால் குறித்த ஆரம்ப பொறுப்புகளின் வகைப்படுத்தல் அங்கீகரிக்கப்படுகிறது. அனைத்து நிதி பொறுப்புகளும் முதலில் முகப்பெறுமதி அங்கீகரிக்கப்படுவதுடன், கடன் அல்லது கடன் பெறுதலை கருத்தில் கொள்ளும் போது முதலீட்டு கழிவு கிரயமாக கருதப்படுகிறது. இதற்காக நேரடி பரிமாற்றம் செய்யக்கூடிய கொடுக்கல்வாங்கல் கிரயம் உள்ளடங்குகிறது.

வங்கி மேலதிகபற்றுகள், வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள், கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் நிதி பொறுப்புகளில் அடங்குகின்றன.

### 4.1.7.8 இலாபம் மற்றும் நட்ட மூலமான முகப்பெறுமதியில் நிதி பொறுப்புகளின்

இலாபம் / நட்டமாக முகப்பெறுமதியுடைய நிதி பொறுப்புக்களில் வர்த்தக மற்றும் நிதி பொறுப்புக்களின் இலாபம் / நட்டமாக முகப்பெறுமதிகளாக ஆரம்ப அங்கீகரிக்காரம் செய்யப்படும் போதே, அங்கீகரிக்கப்பட்ட நிதி பொறுப்புகள் அடங்குகின்றன. நிதி பொறுப்புகள் அண்மித்த காலத்தில் விற்பனை செய்வதற்கோ, மீள் கொள்வனவுக்காக கையகப்படுத்தப்பட்டால் அவை வர்த்தகத்துக்காக வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொறுப்புகளின் பெறுகைகள் அல்லது செலவுகள் வருமான கூற்றில் அங்கீகரிக்கப்பட்டள்ளன.

இலாபம் / நட்டம் மூலம் முகப்பெறுமதியில் ஆரம்ப அங்கீகாரத்தின் அடிப்படையில் கம்பனி எந்தவொரு நிதி சொத்தையும் குறித்தொதுக்கவில்லை.

### 4.1.7.9 கடன்கள் மற்றும் கடன் பெறுதல்.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் பயனுள்ள வட்டி வீத முறை (EIR) காலக்கழிவு கிரய அடிப்படையில் வட்டி கடன்கள் மற்றும் கடன் பெறுதல் கணிக்கப்படுகிறது. பொறுப்புகள் இனங்காணப்படாவிட்டால் வருமான கூற்றுக்களிலும் காலக்கிவு செயற்பாட்டின் பயனுள்ள வட்டி விகித முறைமையிலும் பெறுகைகள் மற்றும் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏனைய செலுத்த பொற்பபுகளில் வட்டியுடனான கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள், வர்த்தக செலுத்த வேண்டியவை, ஏனைய செலுத்த வேண்டியவை, செலுத்த வேண்டிய வருமானவரி செலுத்துகைகள் மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகைகள் ஏனைய நிதி பொறுப்புகளில் அடங்கியுள்ளன.

### 4.1.7.10 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்

நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியுடைய பொறுப்பாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், பிணைமுறி வழங்கப்படுவதற்கு நேரடியாக மாற்றீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கலுக்கான கிரயத்துக்கு சீர் செய்யப்படுகிறது. பின்னர் பொறுப்புகளை அறிக்கையிடும் திகதியில் தீர்த்துவைப்பதற்கு தேவையான செலவுகளின் மிகச்சிறந்த மதிப்பீட்டை விடவும் அதிகமானதாக இருப்பதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியில் திரண்ட காலக்கழிவு குறைப்பதன் மூலம் கிடைக்கிறது.

### 4.1.7.11 நிதி கருவிகளில் ஈடு செய்தல்

தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது சொத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக அல்லது ஒரே தடவையில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு தற்போது வலுவுள்ளதாக்கக்கூடிய சட்டபூர்வ உரிமை

இருந்தால் மட்டும் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புகள் நிதி கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள தேறிய தொகையுடன், அங்கீகரிக்கப்பட்ட தொகையை தீர்த்து வைக்கப்படும்.

இலங்கை கணக்கீட்டு தராதரத்தின் - 39 ஆவது பிரிவக்கு அமைவாகவே நிதி கருவிகளின் முகப்பெறுமதி தீர்மானிக்கப்படும். கம்பனியால் ஒப்பந்த கடப்பாடுகள் இரத்து செய்யப்பட்டால் அல்லது காலம் காலாவதி அடையும் போது மட்டும் நிதி பொறுப்புகள் மீள அங்கீகரிக்கப்படுகின்றன.

### 4.1.7.12 நிதி இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்

கம்பனியின் அடிப்படை நிதி பொறுப்புகள் கடன் மற்றும் கடன் பெறுதல்கள், வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவற்றை கொண்டுள்ளது. இந்த நிதி பொறுப்புகளின் முக்கிய நோக்கம் கம்பனியின் செயற்பாடுகளுக்காக நிதியை பாவித்தல் மற்றும் அந்த செயற்பாடுகளுக்கு உதவுதலை சான்றுபடுத்ததலாகும். மேலும், கம்பனியின் நேரடி செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் கடன் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை, விற்பனை மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை, நிதி மற்றும் குறுங்கால வைப்புகளையும் கம்பனி கொண்டுள்ளது. அதற்கமைய, கம்பனி நிதி உபகரணங்களை பாவிப்பதன் மூலம் கடன் ஆபத்து, திரவத்தன்மை ஆபத்து, வட்டி ஆபத்து போன்றவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு இடர்களுக்கு கம்பனி முகங்கொடுக்கக்கூடிய நிலை, கம்பனியின் நோக்கம் மற்றும் இடர்நிலையை அளவிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் இந்த குறிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

#### கடன் ஆபத்து

கடன் ஆபத்து என்பது வாடிக்கையாளர் அல்லது நிதி உபகரணத்தின் ஒரு தரப்பாளர் ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாமல் போகும் சந்தர்ப்பம் மற்றும் கம்பனியின் ஆரம்ப வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதிகள் தொடர்பாக சிக்கல் நிலை எழும்போது அது கம்பனியின் நிதி நட்டமாகும்.

#### வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

ஒவ்வொரு வாடிக்கையாளர்களினதும் பண்புகளுக்கு ஏற்ப கம்பனியின் கடன் இடர் ஏற்படுவதற்கான நிலை பிரதானமாக தாக்கம் செலுத்துகிறது. இருப்பினும், முகாமைத்துவத்தினால் கம்பனியின் வாடிக்கையாளர் அடிப்படையிலான புள்ளிவிபரங்கள் ஆராய்ந்து பார்க்கப்படுவதுடன், தொழிற்துறை மற்றும் வாடிக்கையாளர்கள் செயற்படும் நாட்டின் வழக்கமான அச்சுறுத்தல் உள்ளிட்ட விடயங்கள் கடன் ஆபத்து காரணிகளில் தாக்கம் செலுத்துகின்றன.

பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் போது வாடிக்கையாளர் தொடர்பான புற தரப்படுத்தல் மற்றும் வங்கி உசாத்துணைகள் கம்பனியால் மீளாய்வு செய்யப்படுகின்றன. அனைத்து வாடிக்கையாளர்களினதும் கொள்வனவு எல்லைகள் நிச்சயிக்கப்பட்டுள்ளதுடன், அவை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கடன் அச்சுறுத்தல் கண்காணிக்கப்படும் போது வாடிக்கையாளர்கள் அவர்களது கடன் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றனர். அதன்போது அவர்கள் மொத்த அல்லது சில்லறை வாடிக்கையாளரா, புவியியல் அமைவிடம், கைத்தொழில், வயது, முதிர்வு மற்றும் சவால்களின் போது தளர்வடையாதிருத்தல் போன்றவை ஆராய்ந்து பார்க்கப்படுகின்றன.

#### திரவத்தன்மை ஆபத்து

திரவத்தன்மை ஆபத்து என்பது பகிர்ந்தளிக்கும் நிதி அல்லது ஏனைய நிதி சொத்துக்கள் மூலம் தீர்க்கப்பட்டுள்ள தனது நிதி பொறுப்புகள் மற்றும் பிணைக்கப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றும் போது கம்பனி முகங்கொடுக்கும் அச்சுறுத்தலாகும். அங்கீகரிக்க முடியாத நட்டம், இழப்பு ஏற்படாமல் அல்லது கம்பனியின் நன்மதிப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் சாதாரண மற்றும் அழுத்த நிலைகளில் குறிக்கப்பட்ட நேரத்தில் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு போதுமானளவு திரவத்தன்மை உள்ளதென உறுதிப்படுத்துல் திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்வதற்கான கம்பனியின் அணுகுமுறையாகும்.

#### வட்டி வீத ஆபத்து

சந்தை வட்டி வீதங்கள் மாற்றமடையும் ஆபத்து கம்பனிக்கு ஏற்படக்கூடியதாக இருத்தல், ஆரம்பத்தில் மிதக்கும் வட்டி வீதத்துடன், கம்பனியின் நீண்டகால கடன் கடப்பாடுகளுடன் தொடர்புடையவையாகும்.

நிலையான மற்றும் மாற்றமடையும் கடன் மற்றும் கடன் பெறுகைகளின் சமப்படுத்தப்பட்ட திரட்டு இருப்பதனால் கம்பனி தனது வட்டி வீத ஆபத்தை முகாமைத்துவம் செய்கிறது. கம்பனி எந்தவொரு வட்டி வீத பரிமாற்ற ஒப்பந்தங்களிலும் ஈடுபடவில்லை.

### 4.1.8 இருப்புக்கள்

**உயிரியல் சொத்துக்களின் விவசாய உற்பத்திகள் மூலமான முடிவுப்பொருட்கள்.**

காலாவதியான மற்றும் குறைந்த வேகத்தில் விற்பனையாகும் பொருட்களுக்கு உரிய கொடுப்பனவு வழங்கப்பட்ட பின்னர் இவை கிரயம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய உண்மையான பெறுமதி குறைந்த பெறுமானத்தை காட்டுகிறது. தேறிய பெறுமதி என்பது கிரயத்தை பெற்று கொண்ட பின்னர் விற்பனை செய்யக்கூடிய மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலை மற்றும் / அல்லது அவை இருக்கும் நிலையிலிருந்து விற்பனை செய்யக்கூடிய நிலை வரை மாற்றம் செய்வதற்கான கிரயமாகும்.

உண்மையான கிரயத்தில் நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் உள்ளீட்டு பொருட்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் நுகர்வு பொருட்கள்.

அறுவடை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் விறபனைக்காக உள்ள குறைந்த கிரயதின் அடிப்படையில் அளவிடப்பட்ட உயிரியல் சொத்துக்களிலிருந்து அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள். விவசாய உற்பத்திகளின் நியாயமான பெறுமதிக்கு மாற்றம் செய்யப்படும் கிரயத்தை சேர்த்த பின்னர் முடிவுப்பொருட்கள் மற்றும் அரை முடிவுப்பொருட்கள், சரக்குகள் மற்றும் நியாயமான விவசாய உற்பத்திகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகிறது.

### 4.1.9 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை மோசமான மற்றும் சந்தேகத்துக்கு உரிய கடனாளிகளுக்கான ஏற்பாடுகளும் அடங்கலாக அவர்களது மதிப்பீடு செய்யப்பட்ட அடையக்கூடிய தொகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.1.10 காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு கையிருப்பு, அழைப்பு வைப்பு, குறுகிய கால உயர் திரவத்தன்மையான முதலீடுகள், தெரிந்த காசு மற்றும் காசுக்கு சமமான தொகைகளுக்கு இலகுவாக மாற்றம் செய்யக்கூடிய பெறுமதிகளில் மாற்றங்கள் சிறிதளவான ஆபத்துக்கு உட்பட்டவை பணம் மற்றும் பணத்துக்கு சமமானவையாக கருதப்படுகின்றன. நிதி பாய்ச்சல் கூற்றுக்காக பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை, காசு கையிருப்பு மற்றும் குறிப்பிடத்தக்களவு வங்கி மேலதிக பற்றுகளுக்காக வங்கிகளில் உள்ள வைப்புகளை கொண்டவையாகும்.

### 4.2 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலை அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒருவருடத்திற்குட்பட்ட அல்லது தேவைக்கு ஏற்ப் பணம் செலுத்துவதன் நிலுவை என்பன நிதி நிலை அறிக்கையில் நடைமுறை பொறுப்பாக வகைப்படுத்தப்படுகின்றது. நிதி நிலை அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒருவருடத்தின் பின்னர் கொடுப்பனவு நிலுவையாகவுள்ள மீதி நடைமுறையல்லா பொறுப்புபாகும். இந்த நிதி நிலை அறிக்கை தயாரிப்பதில் இணங்கானப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக கம்பனிக்கு சட்டபூர்வமான அல்லது ஒப்பந்த கடப்பாடு இருக்கும் போது ஏற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் அங்கிகரிக்கப்படுகின்றன. மேலும் கடப்பாடுகளை தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகளின் வெளிப்பாச்சல் அவசியப்படலாம்.

### 4..2.1 ஊழியர்களுக்கான சலுகைகள்

**அ) விளக்கமிளிக்கப்பட்டுள்ள சலுகை திட்டம்**

விளக்கமளிக்கப்பட்ட நன்மை திட்டம் என்பது விளக்கமளிக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் தவிர்ந்த தொழிலின் பின்னரான நன்மை திட்டமாகும். விளக்கமளிக்கப்பட்ட சலுகை திட்டம் தொடர்பான நிதி கூற்றுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் என்பது கடந்தகால சம்பவங்கள் அறிக்கையிடப்படும்

நாட்களில் விளக்கமளிக்கப்பட்டுள்ள சலுகை கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியாகும். விளக்கமிக்கப்பட்டுள்ள சலுகை ஒப்பந்தம் ஆண்டுதோறும் திட்டமிடப்பட்ட அலகு கடன் முறையை பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது. விளக்கமிக்கப்பட்டுள்ள சலுகை பொறுப்புகளின் நிகழ்கால பெறுமதி நன்மை செலுத்தப்படும் பண அலகில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விதங்களை பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு பாய்ச்சலை தள்ளுபடி செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன், தொடர்புடைய பெறுப்புகளின் விதிமுறைகளுக்கு அண்ணளவாக முதிர்ச்சிக்கான விதிமுறை அமைந்துள்ளது. அனுபவ சீராக்கல்கள் மற்றும் இயல்பான எடுகோள்களில் ஏற்படும் மாற்றங்களால் உண்மையான ஆதாயம் மற்றும் இழப்புகள் அவை எழுகின்ற காலத்தில் வருமான கூற்றில் செலவு அல்லது வரவு வைக்கப்படுகின்றது கடந்தகால சேவை கிரயங்கள் வருமான கூற்றில் உடனடியாக அங்கிகரிக்கப்படுகிறது.

"ஓய்வுபெறுவோருக்கான நன்மைகள்" LKAS -19 இற்கு இணங்க அனைத்து ஊழியர்களுக்கும் சேவையின் முதல் ஆண்டிலிருந்து ஓய்வு பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் 1983 ஆம் ஆண்டின் 12 இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்த்தின் கீழ் ஒரு ஊழியர்க்கான பொறுப்பு தொடர்சியாக 05 ஆண்டுகள் சேவையை பூர்திசெய்த பின்னரே ஏற்படுகிறது.

பொறுப்பு வெளிவாரியாக நிதியளிக்கபட்டவில்லை. ஓய்வு நன்மையக கடப்பாடுகள்ள தீர்மானிக்க பிரதானமாக பயன்படுத்தும் பின்வரும் எடுகோள்கள் பாவிக்கப்பட்டள்ளது.

**பிரதான எடுகோள்கள்**

| | |
|---|---|
| கழிவு வீதம் | 10% |
| சம்பள உயர்வு வீதம்<br>தொழிலாளர்<br>ஊழியர்கள் | 20% இரண்டு வருடத்திற்கு ஒரு முறை<br>8% வருடதந்தம் |
| ஓய்வு பெறும் வயது<br>தோட்டத் தொழிலாளர்கள்<br>தோட்டத் ஊழியர்கள்<br>தலமை அலுவலக ஊழியர்கள் | <br>60 வயது<br>58 வயது<br>55 வயது |

கம்பனி தொடர்ச்சியாக இயங்கும் என கருதப்படுகிறது.

31 டிசம்பர் 2014 இல் அனுகூலங்களின் திரட்டிய சமகால பெறுமதி ரூபா 214,195,008/- (2013 - ரூபா 185,617,976/-). இந்த விடயம் நிதிக்கூற்றில் ஓய்வு அனுகூல கடப்பாட்டின் கீழான பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### ஆ) விளக்கமளிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

விளக்கமளிக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் என்பது தொழிலுக்கு பிந்திய அனுகூல திட்டமாகும். அதன் கீழ் கம்பனி தனியாக நிலையான பங்களிப்பு தொகை செலுத்தப்படுவதுடன், எதிர்காலத்தில் பணத்தை செலுத்துவதற்கான சட்டபூர்வ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டை கொண்டிருக்கவில்லை. அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கும் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்துக்கு பங்களிப்பு பணம் செலுத்துதல் ஊழியர்களால் பங்களிப்பு வழங்கப்படும் காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டத்துக்கான செலவாக கருதப்படுகிறது.

கம்பனி இலங்கை தோட்ட உரிமையாளர் சேமலாப நிதி சங்கம் (CPPS) / தோட்ட பதவிநிலை அலுவலர் சேமலாப நிதி சங்கம் (ESPS)/ ஊழியர் சேமலாப நிதியம் (EPF) ஆகியவற்றுக்கு ஊழியர்களின் ஒருங்கிணைந்த சம்பளத்தின் 12 % தொகையை பங்களிப்பு செய்கிறது.

கம்பனி ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு (ETF) ஊழியர்களின் ஒருங்கிணைந்த சம்பளத்தின் 3 % தொகையை பங்களிப்பு செய்கிறது.

### 4.2.2 பிற்போடப்பட்ட வருமானம் - கொடைகள் மற்றும் மானியங்கள்

கொடைகள் வழங்கப்பட்டுள்ளதாக நியாயமான சான்றுகள் உள்ளதுடன், இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ள போது அரச கொடைகள் அங்கீகரிக்கப்படுகின்றன, கொடை செலவு விடயத்துடன் தொடர்புடையதாக இருக்கும் போது, அது முறைப்படியான அடிப்படையில் கொடை இழப்பீடு செலுத்த எதிர்பார்க்கப்படும் கிரயத்திற்கு ஏற்ற வகையில் பொருத்துவதற்கு தேவையான காலப்பகுதியில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகிறது. கொடை சொத்துடன் தொடர்புடையதாக இருக்கும் போது, அது பிற்போடப்பட்ட வருமானமாக அங்கீரிக்கப்பட்டு, தொடர்புடைய சொத்துக்களினதும் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலத்தை விடவும் சமமான தொகைக்கு வருமானம் விடுவிக்கப்படுகிறது

நாணயம் சாராத கொடை கம்பனிக்கு கிடைக்கும் போது, சொத்துக்கள் மற்றும் கொடைகளின் பெயரளவிலான தொகையில் உத்தேசமாக அறிக்கையிடப்படுவதுடன், எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் உட்கட்டமைப்பு சொத்துக்களின் பயனை நுகரும் பாங்கு மற்றும் சமமான வருடாந்த தவணைகள் மூலம் வருமானத்தில் விடுவிக்கப்படுகிறது. சமகாலத்துடன் தொடர்புடைய சந்தை விகிதத்தை விடவும் குறைவான வட்டி விகிதத்துடன் அரசியால் அல்லது தொடர்புடைய நிறுவனத்தினால் கடன் அல்லது அதற்கு சமமான மாணியம் வழங்கப்படும் போது, இந்த சாதகமான வட்டி விகிதம் அரசின் மேலதிக கொடையாக கருதப்படுகிறது.

### 4.2.3 வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை

வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை அவற்றின் கிரயங்களுக்கு அமைய வெளிப்படுத்தப்படுகின்றன.

### 4.3 மூலதன கடப்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற தன்மை

கம்பனியின் மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள் நிதி கூற்றுகளில் உரிய குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 4.4 நிதிநிலை கூற்றின் பின்னர் இடம்பெறும் சம்பவங்கள்

அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் இடம்பெறும் அனைத்து சம்பவங்களினதும் பொருள் ரீதியான தன்மை ஆராய்ந்து பார்க்கப்படுவதுடன், பொருத்தமான சங்தர்ப்பங்களில் நிதி கூற்றுகளில் பொருத்தமான மாற்றங்கள் வெளிப்படுத்தடுகிறது.

### 4.5 பங்கு ஒன்றிற்க்கான உழைப்பு

கம்பனி தனது சாதாரண பங்குகளுக்கு ஒரு பங்குக்கான அடிப்படை உழைப்பை (EPS) சமர்ப்பிக்கிறது. கம்பனியின் சாதாரண பங்குதாரர்களின் இலாபம் அல்லது நட்டம் அந்த காலப்பகுதியில் எஞ்சியுள்ள மொத்த பங்குகளின் சராசரி பெறுமானம் பிரிக்கப்பட்டு பங்குக்கான அடிப்படை உழைப்பு கணக்கிடப்படுகிறது.

### 4.6 நிதி சாரா சொத்துக்களின் பெறுமான இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்கள் பெறுமானத்தேய்வு அடையக்கூடிய அறிகுறி உள்ளதா என கம்பனி மதிப்பீடு செய்கிறது. அவ்வாறான ஏதாவது அறிகுறி காணப்பட்டால் அல்லது சொத்துக்காக வருடாந்த பெறுமானத்தேய்வு மதிப்பீடு தேவைப்பட்டால் கம்பனி சொத்துக்களிலிருந்து பெறக்கூடிய தொகையை மதிப்பீடு செய்கிறது. சொத்துக்களிலிருந்து மீள பெறக்கூடிய தொகை என்பது, சொத்தின் அல்லது பண உருவாக்க அலகின் நியாயமான பெறுமதியை விட உயர்ந்த பெறுமதியை கொண்டிருப்பதுடன், சொத்துக்கள் ஏனைய சொத்து குழுக்களிலிருந்து பெரும்பாலும் சுயாதீனமான பணப்பாய்ச்சல் உருவாக்கத்தை செய்யவில்லை எனின், அது விற்பனைக்காக உள்ள குறைந்த ஆகுசெலவு மற்றும் அதன் பயன்பாட்டு பெறுமதி மற்றும் தனியான சொத்துக்காக தீர்மானிக்கப்படுகிறது. சொத்தை தொடர்ச்சியாக கொண்டு செல்லக்கூடிய தொகை அதிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையையும் தாண்டி செல்லும் போது, சொத்துக்கள் பலவீனமானவை என கருதப்படுவதுடன், மீள பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையாக எழுதப்பட்டுள்ளது. பயன்பாட்டின் புத்தக பெறுமதி அதிலிருந்து மீள அறவிடக்கூடிய பெறுமதியை விடவும் கூடுதலாக இருக்கும் போது, அந்த சொத்துக்கள் தேய்வடைந்ததாக கருதப்படுவதுடன், மீள அறவிடக்கூடிய தொகை குறிப்பிடப்படுகிறது.

பயன்பாட்டு பெறுமதியை மதிப்பீடு செய்யும் போது தற்போதைய சந்தை பெறுமதி தொகைகளின் சமகால பெறுமதி மற்றும் சொத்துக்களுக்கு தனித்துவமான அச்சுறுத்தல் வெளிப்படக்கூடிய வகையில் முன்னரான வரி கழிவு வித முறை பாவிக்கப்பட்டு, அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் சமகால பெறுமதிக்கு கழிவு வழங்கப்படுகிறது. முகப்பெறுமதியில் விற்பனை கிரயத்தை குறைக்கும் போது, பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பாவிக்கப்படுகிறது. மதிப்பீடு செய்யப்படும் பெருக்கம், மேற்கோள் காட்டப்பட்ட பங்குகளின் விலை அல்லது ஏனைய நியாயமான பெறுமதி சுட்டிகள் இந்த கணக்கீட்டுக்கு உதவுகின்றன.

அந்த செலவு வகுதிகளின் பரந்த வருமான கூற்றுக்களில் தொடர்ச்சியான செயற்பாட்டின் போதான பெறுமான தேய்வு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முன்னர் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள மதிப்பீடு செய்து பங்கு மூலதனத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இந்த சந்தர்ப்பத்தில், இதற்கு முன்னரான ஏதாவது மீள் மதிப்பீட்டின் தொகைக்கு சமமாக பெறுமான தேய்வு அங்கீகரிக்கப்படுகிறது.

நன்மதிப்பு தவிர ஏனைய சொத்துக்களுக்கு முன்னர் இனங்காணப்பட்டுள்ள பெறுமான தேய்வு தொடர்ந்தும் இருக்காது அல்லது குறைந்துள்ளது என்பதற்கான ஏதாவது அறிகுறிகள் உள்ளதா என ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மதிப்பீடு செய்யப்படுகிறது. அவ்வாறான அறிகுறிகள் இருப்பின், கம்பனியால் பெற்றுக்கொள்ளக்கூடிய தொகை மதிப்பீடு செய்யப்படுகிறது. இறுதி பெறுமானத்தேய்வு இனங்காணப்பட்ட நாளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சொத்துக்களை தீர்மானிப்பதற்காக பாவிக்கப்படும் மதிப்பிடுகளில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே முன்னர் இனங்காணப்பட்ட பெறுமானத்தேய்வு மீள தயாரிக்கப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் சொத்துக்களின் புத்தக பெறுமதி, அவற்றிலிருந்து மீண்டும், மீண்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையை அதிகரிக்கிறது. அந்த அதிகரித்த தொகை, முன்னைய ஆண்டின் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு இனங்காணப்பட்டிருக்காவிட்டால், தீர்மானிக்க வேண்டியிருந்த பெறுமானத்தேய்வின் தேறிய தொகையை விடவும் அதிகமானதாக இருக்கக்கூடாது. சொத்துக்கள் மீள மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு கொண்டுவரப்படுமாயின், மீள தயாரித்தல் மீள் மதிப்பீட்டு அதிகரிப்பாக கருதப்படுமே தவிர, அவ்வாறான மீள தயாரித்தல் வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. மீள பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையின் பிற்கால அதிகரிப்புக்கு நன்மதிப்பு தொடர்பில் இனங்காணப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு மீள கணக்கிடப்பட மாட்டாது.

குறிப்பிடத்தக்க சொத்துக்களின் கணிப்பீட்டுக்கு பின்வரும் பிரமாணங்கள் பாவிக்கப்படுகின்றன.

**நன்மதிப்பு**

சம்பவங்கள் அல்லது அறவீடுகள் மூலம் கொண்டுள்ள பெறுமதி வீழ்ச்சியடையலாம் என்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டால், வருடாந்தம் அல்லது கூடுதலான தடவைகளின் அடிப்படையில் நன்மதிப்பு மீளாய்வு செய்யப்படுகிறது. பணம் ஈட்டும் அலகின் (அல்லது பணம் ஈட்டும் அலகு குழுவின்) பெற்றுக்கொள்ளக்கூடிய தொகை மதிப்பீடு செய்யப்பட்டு நன்மதிப்புக்கான பெறுமானத்தேய்வு தீர்மானிக்கப்படுகிறது. நன்மதிப்பு தொடர்பான பெறுமானத்தேய்வுகளை எதிர்காலத்தில் மீள தயாரிக்க முடியாது. டிசம்பர் 31 திகதியில் கம்பனி வருடாந்த நன்மதிப்பு தொடர்பான பெறுமானத்தேய்வு சோதனை செய்யப்படுகிறது. இருந்த போதிலும், தற்போது ஆண்டு இறுதியில் எந்தவொரு நன்மதிப்பும் பதிவாகவில்லை.

**கட்புலனாகா சொத்துக்கள்**

நிச்சயிக்க முடியாத பயனுள்ள ஆயுட்காலத்தையுடைய கட்புலனாகா சொத்துக்கள், பொருத்தமானவாறு, தனித்தனியாகவோ அல்லது பணம் ஈட்டும் அலகு மட்டத்திலோ வருடாந்த காலக்கழிவு சோதனையை டிசம்பர் 31 திகதியில் கம்பனி செய்யப்படுகிறது. இருந்த போதிலும், தற்போதய கம்பனி ஆண்டு இறுதியில் எந்தவொரு கட்புலனாகா சொத்துக்கள் பதிவிட்டிருக்கவில்லை.

**4.7 வருமான கூற்று**

கம்பனிக்கு பொருளாதார வருவதற்கு வாய்ப்பு இருக்கும் வரை வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், எந்த கட்டத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டாலும் வருமானத்தை இலகுவாக அளவிடலாம். கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டியவற்றின் முகப்பெறுமதி, தேறிய நன்மை கொடுப்பனவு, வர்த்தக கழிவு மற்றும் விற்பனை வரி அடிப்படையில் வருமானம் அளவிடப்படுகிறது. வருமானத்தை அங்கீகரிப்பதற்காக பின்வரும் விசேட முறைகள் பாவிக்கப்படுகின்றன.

### 4.8 வருமான அங்கீகாரம்

பொருளாதார நன்மைகள் கம்பனிக்கு கிடைக்கும் நிலை இருக்கும் வரைக்கும் வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான வருமானங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஆகுசெலவை நம்பகமாக அளவிடலாம். வுர்த்தக கழிவகள் மற்றும் விற்பனைகளுக்காக கிடைக்க வேண்டிய வரிகளின் தேறிய பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகிறது. வருமானத்தை அங்கீகரிப்பதற்காக பின்வரும் குறிப்பிடத்தக்க அளவுகோல்கள் பாவிக்கப்படுகின்றன.

#### (அ) பொருட்களின் விற்பனை

பொருட்களின் உரித்து தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய இடர் அல்லது வெகுமதிகள் கொள்வனவாளருக்கு அனுப்பப்பட்டுள்ள போதே பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. வருமானங்கள் தரகு, விற்பனை செலவு மற்றும் ஏனைய வருமானம் தொடர்பான பெறுமானங்களை கொண்டவையாகும்.

#### (ஆ) வட்டி

சேகரிக்கக்கூடிய இயலுமை சந்தேகத்துக்கு இடமானது என்றால் தவிர, வட்டி வருமானம், ஏனையவை திரண்ட வட்டி வருமானமாக (சொத்தின் வினைத்திறனான விளைவு கணக்கில் எடுக்கப்பட்டு) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

#### (இ) பங்குலாபம்

மேற்கோள் காட்டப்பட்ட பிணையங்கள் பங்குலாபத்துக்கு முந்திய திகதியில் கொடுப்பனவை பெற்றுகொள்வதற்கான உரிமை ஏற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து பங்குலாப வருமானம் விரிவான வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

#### (ஈ) வாடகை வருமானம்

திரண்ட அடிப்படையில் வாடகை வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

#### (உ) காப்புரிமை

தொடர்புடைய உடன்படிக்கைகளின் பொருளுக்கு ஏற்ற வகையில் திரட்டிய அடிப்படையில் காப்புரிமை அங்கீகரிக்கப்படுகிறது.

#### (ஊ) ஏனையவை

ஏனைய வருமானங்கள் திரண்ட அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போதும், முதலீடு உள்ளிட்ட ஏனைய நடைமுறையற்ற சொத்துக்கள் அகற்றும் போதும் கிடைக்கும் வருமான தேறிய இலாபம் மற்றும் நட்டங்கள் விரிவான வருமான கூற்றில் கணக்கிடப்பட்டுள்ளது. செலவு, மீள மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றப்படும் போது, குறித்த சொத்துக்கள் தொடர்பான மீள் மதிப்பீட்டின் இருப்பு தடுத்து வைக்கப்பட்ட இலாபத்துக்கு / (நட்டம்) நேரடியாக மாற்றப்படும்.

தற்செயலான செயற்பாடுகளிலிருந்து பிரதான வருமான உருவாக்கல் செயற்பாடுகள் வரை உள்ள ஆதாயங்கள் மற்றும் நட்டங்களினதும் பொருள் சாராத பொறுப்புகள் அற்ற கம்பனி அல்லது அதற்கு சமமான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து தோற்றம் பெறுபவை தேறிய அடிப்படையில் அறிக்கையிட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.9 செலவீனம் அங்கீகரித்தல்

ஏற்பட்டுள்ள கிரயம் மற்றும் நிலையான வருமான விடயங்களின் ஈட்டல்கள் ஆகியவற்றுக்கு இடையிலான நேரடி இணைப்புகளின் அடிப்படையில் செலவுகள் வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் மற்றும் சொத்துக்கள்,

பொறிகள் மற்றும் உபகரணங்களை வினைத்திறனாக பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தை / (நட்டம்) எற்படும் போது அவை வருமானத்தில் அறவிடப்படுகின்றன.

செலவு முறையின் செயலாற்றுகை, கம்பனியின் செயலாற்றுகையின் கூறுகள் போதுமானளவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால் அவ்வாறான சர்ப்பிப்பு முறை பின்பற்றப்பட்டுள்ளது என்பது வருமான கூற்றை சமர்ப்பிப்பதற்கான பணிப்பாளர்களின் கருத்தாக உள்ளது.

### அ) நிதியீட்டல் வருமானம் மற்றும் செலவீனம்.

முதலீடு செய்யப்பட்ட நிதிக்கான வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்றத்தின் மூலம் கிடைக்கும் இலாபம் ஆகியவை நிதி வருமானத்தில் உள்ளடங்குகின்றன. வட்டி வருமான வருமான கூற்றில் அது திரன்டதாக அங்கீகரிக்கப்படுகின்றது.

கடன்கள் மற்றும் பெற்றுக்கொண்டவைகளுக்காக செலுத்த வேண்டிய வட்டி நிதி செலவில் அடங்குகிறது. பொறுப்புகளின் எஞ்சிய மீதி அடிப்படையில்நிலையான கால வட்டி வீதத்தை உருவாக்குவதற்காக நிதி குத்தகை கொடுப்பனவு கூறுகளுக்கு வட்டி செலவீனம் ஒவ்வொரு காலத்திற்குமாக குத்தகை காலப்பகுதி முழுவதும் ஒதுக்கப்படுகிறது.

### ஆ) வருமான வரி செலவீனம்

வருமான வரி செலவீனமானது நடைமுறை வரியை உள்ளடகியது. அது உரிமையாண்மையில் அங்கிகரிக்கப்படும் போது உரிமையாண்மையில் நேரடியாக தொடர்புள்ள உருப்படியில் அங்கிகரிக்கப்படுகின்ற அளவு தவிரவருமான வரி செலவீனம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கிகரிக்கப்படுகின்றது

### வருமான வரி

ஆண்டுக்கான வரி விதிக்ககூடிய வருமானத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் செலுத்தவேண்டிய வரி நடைமுறை வரியாகும் , அறிக்கையிடப்படும் திகதியில் விதிக்கப்பட்ட வரி விகிதம் மற்றும் முன்னைய ஆண்டுக்காக செலுத்த வேண்டிய வரி சீராக்கல்கள் முறையே மற்றும் உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்கிடப்படுகிறது.

### இ) பிற்போடப்பட்ட செலவீனம்

ஒரு நிதி ஆண்டை விடவும் கூடுதலான காலத்துக்கு நன்மை அல்லது தொடர்பு இருப்பதாக கருதப்படும் செலவு பிற்போடப்பட்ட செலவாக வகைப்படுத்தப்படுகிறது. அவ்வாறான செலவுகள் நேர்கோட்டு அடிப்படையில் அது தொடர்புடைய காலப்பகுதியில் பதிவழிக்கப்படுகிறது.

## 4.10 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று "மறைமுக முறை" பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட வட்டி தொழிற்பாட்டு காசுப்பாய்ச்சலின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கிடைக்கும் வட்டி மற்றும் இலாப பங்கு முதலீட்டு காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், செலுத்தப்படும்பங்கு இலாபம் மற்றும் கிடைக்கும் அரச கொடைகள் நிதி பாய்ச்சல் கூற்று சமர்ப்பிப்பதற்காக நிதியீட்டல் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## 4.11 பிரிவு அறிக்கையிடல்

கம்பனியின் பல்வேறு வியாபார பிரிவுகளுக்கான பிரிவுசார் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகை உற்பத்திகளினதும் அச்சுறுத்தல் மற்றும் சாதகமான பெறுபேறுகள் ஆராய்ந்து பார்க்கப்பட்ட பின்னர் கம்பனியால் வழங்கப்பட்ட பொருட்களின் தன்மையின் அடிப்படையில் வர்த்தக வகைப்படுத்தல் தீர்மானிக்கப்படுகிறது.

அலகு பிரிவுகள் ஒன்றுடனொன்று நெருக்கமாக உள்ளது என்பதுடன், ஒரே கைத்தொழில் சூழலில் இயங்குவதனால் புவியியல் ரீதியாக பிரிவுபடுத்தல் தேவைக்கு பொருள் ரீதியான தாக்கம் இல்லை.

பிரிவுகளின் செயற்பாடுகள் நிதிக்கூற்று குறிப்புகளில் 50, 51 ஆம் பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் நேரடியாக காரணமாக இருக்கக்கூடிய வருமானம் மற்றும் செலவு உரிய பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுகிறது. பிரிவொன்றுக்கு நேரடியாக காரணமாக இருக்காத வருமானங்கள் மற்றும் செலவுகள் இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவற்றின் வள பாவனை அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது.

ஒவ்வொரு பிரிவுக்கும் நேரடியாக காரணமாக இருக்கக்கூடிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் உரிய பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. பிரிவொன்றுக்கு நேரடியாக காரணமாக இருக்காத சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் நியாயமான அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன. ஒதுக்கப்படாத விடயத்திலிருந்து பிரதானமாக வட்டி கடன், கடன் பெறுதல் மற்றும் செலவுகளை கொண்டதாகும்.

கணக்கீட்டு காலப்பகுதியை விடவும் பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் பிரிவுகளின் சொத்துக்களை கையகப்படுத்தும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த கிரயமே பிரிவு மூலதன செலவு எனப்படுகிறது.

## குறிப்பு - 01- குத்தகை ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | குறிப்பு | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|---|
| காணியை பயன்படுத்துவதற்கான உரிமை | 01:01 | 62,806,238 | 65,158,972 |
| குத்தகைக்கு வழங்கியிருக்கும் உயிரியல் சொத்து | 01:02 | 97,312,617 | 98,414,156 |
| குத்தகைக்கு வழங்கிய சொத்துகள் (காணி பயன்படுத்துவதற்கு உரிமை மற்றும் குத்தகைக்கு வழங்கியிருக்கும் உயிரியல் சொத்து) | 01:03 | 6,329,941 | 8,575,059 |
| **மொத்தம்** | | 166,448,796 | 171,148,187 |

## குறிப்பு - 01- காணியை பயன்படுத்துவதற்கான உரிமை

2013 ஆகஸ்ட் 21 திகதியிடப்பட்ட இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனட் வெளியிட்டடுள்ள பரிந்துரைக்கப்பட் நடைமுறை அறிக்கையின் (SoRP) திருத்திங்களுக்கான மாற்று நடவடிக்கை அறிக்கைக்கு (SoAT) இணங்க காணியை பயன்படுத்துவதற்கான உரிமைகணக்கிடப்பட்டிருக்கிறது.

